

சிறுகதை

# மஞ்சரி

33

மாதஇதழ்

பிரதம ஆசிரியர்: மு தயாளன்

வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்

£4.00 / 150Rs/50Rs(india)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்










| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |












| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |












| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | சு. ஆர்த்திகா | அலெக்ஸ் பரந்தாமன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 400Rs/£4 | 400Rs/£4 | 500Rs/£4 | 400Rs/£4 |

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

*எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்*
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

**இது வரை எந்தப் புத்தகமும் வெளியிடாது முதல் புத்தகம் வெளியிடவிரும்பும் இளம் எழுத்தாளர்கள் (சிறுகதை, நாவல்) விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.** luxmi2128@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியில் கலகம் வேண்டாம்

இலங்கையில் கல்விச் செயற்பாடுகள் கேள்விக் குறியாக உள்ளன. ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கான ஊதியம் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை. எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் மற்றைய தொழில்களோடு ஒப்பிடும்போது ஆசிரியத் தொழிலுக்கு ஊதியம் குறைவான நிலையிலேயே உள்ளது.

இந்த ஊதியக் குறைவினால் பெரும்பாலான ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புகள் எடுத்து தங்கள் பற்றாக்குறைகளை சமப்படுத்திக் கொள்கிறார்கள். இது ஆசிரியர்களுக்கிடையேயான போட்டியை உருவாக்குகிறது. இந்தப் போட்டியின் உச்சம் பாடசாலைகளில் தங்களிடம் படிக்கும் மாணவர்களையே தங்கள் பிரத்தியேக வகுப்புகளுக்கு வரச் செய்து பண வருவாயைக் கூட்டுகிறார்கள்.

பிரத்தியேக வகுப்புகள் எடுப்பது எல்லா ஆசிரியர்களினாலும் முடிவதில்லை. அவர்களின் நாளாந்த வாழ்க்கை நிலை கேள்விக்குறியாக மாறிவிடுகிறது. இதனால் பாடசாலைகளில் அவர்கள் மனம் வைத்துப் படிப்பிப்பதில்லை. பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களாகவே இருக்கிறார்கள். ஆசிரியப் பணி மற்றவற்றைப்போல் செய்ய முடியாது. நான்கு மணித்தியாலங்கள் ஒரு ஆசிரியர் ஒழுங்காகப் படிப்பிக்க வேண்டுமானால் ஆகக் குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் பாடங்களை முறையாகத் தயாரிக்க வேண்டியது. கட்டாயமாகும்.

ஆசிரியத் தொழிலில் வருவாய் குறைவினால் துயரங்கொள்ளும் ஆசிரியர்களால் மேற்கூறப்பட்ட தயாரிப்பு நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை. இது அவர்களின் குற்றமுமில்லை.

வேலை நிறுத்தங்கள் செய்வதின் மூலம் அரசாங்கங்களை அடி பணிய வைப்பதும் சாத்தியமில்லை என்பது தற்சமயம் இலங்கையில் நடைபெறும் வேலை நிறுத்தங்களிற்கான பதில்களிலிருந்து கிரகிக்கக் கூடியதாகவுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களின் வினாத்தாள்களைத் திருத்தும் பணிகளை திட்டமிட்டுத் தாமதப்படுத்த எண்ணுவதாக பல செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளில் வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த நடவடிக்கைகளால் தங்கள் எதிர்ப்பைக் காட்டலாமே ஒழிய எதையும் பெற்றுக் கொள்ள முடியாது. இதனால் மீண்டும் பாதிக்கப்படப்போவது மாணவர்களே என்பதை மறந்துவிட வேண்டாம்.

மு.தயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கங்கள்


பக்கம் 3
மஞ்சம்

பக்கம் 9
பெண்ணின் பெருமை

பக்கம் 16
யன்னலோரப் பயணம்


**சந்தா விபரம்:**
**Srilanka:1000Rs/Year**
Mrs Sasikala Thanabalasingam,
Commercial bank, Trinco branch,
8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:**
80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan,
Barclays, Sort code 20-37-15, A/C
Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22


பக்கம் 19 - படிப்பும் பாதிப்பும்
பக்கம் 22 - வேலியே பயிரை மேய்ந்தது
பக்கம் 26 - கிணற்றடி
பக்கம் 29 - கரும்பலகை
பக்கம் 33 - தெய்வம் நின்றறுக்கும்
பக்கம் 38 - கெட்டுப்போன காலம்
பக்கம் 42 - தாய்மை
பக்கம் 47 - மஞ்சரி 32 ஒரு பார்வை
பக்கம் 48 - சிறுகதை எழுதுவது ஏப்படி?





பக்கம் 1
கல்வியில் கலகம் ....


**முதன்மை ஆசிரியர்** மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா,
திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா
**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** செல்வி த. சரண்யா
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , T. சௌந்தர்

**சிறுகதை மஞ்சரி 32**
**இன் சிறந்த இரு சிறுகதைகள்**
1. பஞ்சவர்ணம் - ந. ஜெயரூபலிங்கம்
2. சண்டியர் வாழ்வு - சூசை எட்வேட்

**அன்பான வேண்டுகோள்.**
*படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரம் அனுப்ப மறக்க வேண்டாம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணபவன் ஆதவன்



எழுத்துத் துறைக்குப் புதியவர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஓயாது எழுதிக் கொண்டிருக்கிறார். சிங்கப்பூரில் வாழ்கிறார். தரமான ஒரு எழுத்தாளர். சமூக ஊடகங்களில் நிறைந்த பங்களிப்புச செய்கிறார். சமூகப் பிரச்சினைகளை நுணுகிப் பார்த்து எழுதுகிறார். சிறுகதை மஞ்சரியில் இது இவரது முதலாவது கதை.

# மஞ்சம்



மஞ்சம் தனி அழகுதான். தேரின் அழகை விட மஞ்சத்தின் வசீகரம் என்னை அதிகம் கவர்கிறது. அளவில் சிறியதாக கண்ணுக்குள் அடங்கியதாக இருப்பது கூட காரணமாக இருக்கலாம். அதன் நிறமும் அடர் மஞ்சளாக இருப்பது கண்ணுக்கு குளிர்ச்சியை தருகிறது. மாலை மங்கி இருள் கவிழ வர்ண விளக்குகள் அலங்காரத்தில் ஆடி அசைந்து வரும் அழகே தனிதான். அதன் இரவுப் பயணம் இன்னும் அதிக குளிர்ச்சியைத் தருகிறது. உச்சி வெயிலில் கால் கடுக்க வியர்க்க விறுவிறுக்க நின்று தேரை இரசிக்க முடியாதது எனக்கு மட்டும் தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வாக தெரியவில்லை.

தேர் அழித்தலின் அடையாளம். என்பதால் ஆக்ரோஷமான வடிவம் போலும். அதனால் இயல்பிலேயே அதற்கு இறுமாப்பு இருக்கிறது. ஆனால் மஞ்சம் காதலின் வடிவமாக தெரிகிறது. இதயத்துக்கு நெருக்கமாக மென்மையாக குளிர்ச்சியாக பயணிக் கிறது. அவளும் அப்படித்தான். புறாக் கள் தெரிந்து நல்ல தானியங்களை எடுப்பது போல சொற் களை தெரிந்து வைத்திருக்கிறாள். அவை மெல்லுவது போல சொற்களை வலியில்லாமல் அடுக்கி வழிய விடுவதால் அவள் மென்மையானவள். அழகானவை எல்லாம் குளிர்ச்சியானவை என்று பொதுமைப்படுத்தலாம். அழகானவை இயற்கையாகவே குளிர்ச்சியை கண் களின் வழியே இதயத்திற்கு இறக்கி விடுகின்றன.

நானா இப்படியெல்லாம் இரசிக் கிறேன்? என்னால் நம்ப முடியவில்லை. இப்படியெல்லாம் நான் உளறுவது இப்போது சில நாட்களாகத்தான்.

இன்றைக்கு மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் மஞ்சம். நாட்க ணக்கில் சொல்லுவதென்றால் பத்தாம் நாள் திருவிழா. சுத்தமாக துடைத்து கழுவி அழகாக அலங்கரிக்கப்பட்ட மஞ்சம் கோவில் முன்பக்கம் பதுமை போல நின்றது. தரிசாக கிடக்கும் பக்கத்து நெல் வயலில் இருந்து வீசும் வறண்ட காற்றுக்கு பாகமாலைகள் காற்று வீசும் திசையில் சுழன்றன. அவற் றால் முட்டுப்பட்ட மணிகள் கல கல என்று சிணுங்கும் ஒலி அவளின் சிரிப்பை இடைவிடாது நினைவுபடுத்தியது. சிரிப்பு மட்டும் இல்லை. மஞ்சம் நின்ற தோரணை கூட அவளை பிரதியெடுத்த மாதிரி உணர்ந்தேன். மற்றவர்கள் என்ன தான் சொன்னாலும் அவளின் நல்ல வெள்ளை வதனம் மேலதிக அழகுதான். அவளைக் கண்டு ஒன்பது நாட்கள் ஆகி விட்டது. கொடியேற்றம் அன்று இரவு திருவிழாவுக்கு வந்தவள் அடுத்த நாட் களில் காணாமல் போனாள். அடுத்து வந்த ஒவ்வொரு நாளும் தேடினேன். உள்வீதி, வெளிவீதி, தேர் முட்டியடி வயலில் இருந்த ஐஸ்கிரீம் கடைகள் மற்ற கடைகள் இப்படி எல்லாப் பக்க மும் தேடினேன். இதையெல்லாம் மற்றவர்கள் பார்ப்பார்கள் என்பதை விட கோபுரத்தில் இருந்து பிள்ளையார் பார்ப்பார் என்பது கூச்ச மாக இருந்தது. அந்தத் தொந்தரவை விரும்பியே ஏற்றுக் கொண்டேன்.

பகலில் அலுவலகம் போக வேண் டும். சிரமப்பட்டு வேலையோடு மேலதி காரியிடம் சொல்லிவிட்டு வந்தது எல் லாமே அந்தக் காட்சிக்குத்தான். மற்ற நாட்களில் இரவு திருவிழாவுக்குத்தான் வரமுடிந்தது. அதுவும் இருண்ட பிறகு. தேர் சரியாக சித்திரை வருடப்பிறப்பு விடுமுறை அன்றைக்கு வருவதால் கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையே போய் பிரதட்டை அடித்து விட்டுதான் மற்ற வேலை. மஞ்சத்திற்கு இந்த மாதிரி கடுமையான நேத்தி இல்லை. அதனால் உடலில் வலியில்லை மனம் மட்டும் வலிக்கிறது. வலி என்பதும் சுகமான உணர்வுக்குப் பொருந்தும் வேடிக்கை அதை என்னவென்று சொல்ல.

நாங்கள் இருவரும் ஒரே ஆண்டில் A/L எடுத்தவர்கள். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நான். பக்கத்தில் மகளிர் கல்லூரியில் அவள். எனக்கு மட்டும் இல்லை என்னோடு படித்த அனைத்து நண்பர்களுக்கும் இருந்த பொது ஏக்கம். ஆண்களும் பெண்களும் படிக்கும் கலவன் பள்ளியில் படிப்பது கலைந்த கனவானதுதான். ஒரே தனியார் கல்வி நிறுவனத்தில் படித்தாலும் நான் கணிதப் பிரிவு அவள் வர்த்தகம். அங்கேயும் கடவுள் வஞ்சித்ததை என்னவென்று சொல்வது. படிப்பு முடியும் வரை ஒரே ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர மற்றும்படி பேசிக் கொண்டதே இல்லை. கொடியேற்றத்தில் பார்த்ததும் அவளாகவே விசாரித்தாள். இன்றைக்கு பேச வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே வியாபித்துக் கிடக்கிறது.

---------------

அம்மாவின் கையை எனது இடது கையால் இறுக்கமாக பிடித்திருந்தேன். நேரம் இரவு எட்டுமணியை தாண்டிவிட்டது. வீதியில் கட்டப்பட்ட ஒலி பெருக்கிகள் வடக்கு வீதியில் நடக்கும் மேளச்சமாவை வாங்கி தெறிக்க விட்டன. கிழக்கு வீதி மூலையில் நின்று பார்க்கிறோம். மஞ்சத்தின் முன்னால் இரண்டு கூட்டம் மேளம் நீண்ட ஆலாபனையும் நாகதாழியும் வாசிக்க நானோ வலதுகையில் இருந்த ஐஸ்பழத்தை சூப்பிக்கொண்டும் கடை வாயில் வழியும் ஐஸை நாக்காலும் துளாவித் துடைத்தேன். எனக்கு பத்து வயசுதான் ஆகுது. வீதியில் கம்பங்களில் ஒளிரும் வண்ண விளக்குகளில் பார்வையைத் தொலைத்தேன். அவற்றில் சில பழுது பட்டதாலோ என்னவோ விட்டு விட்டு மின்னின. அதை நான் இரசித்தேன். மஞ்சம் நோக்கி எனது பார்வை திரும்பவில்லை. ஐஸ்சும் வண்ண விளக்கும் இடையிடை என்னை ஒத்த வயது பெடிகளின் வாய்களில் இருந்து பிறக்கும் விசிலின் ஒலியும் அதிகம் கவர்ந்தது. திருவிழாக்காரரும் குடுத்த காசுக்கு மேலதிகமாக வாசிக்க கேட்டு தொந்தரவு செய்திருக்க வேண் டும். ஒன்று முடிய இன்னொரு பாட்டு வாசிக்க மேளக்காரர்களை கேட்டுக் கொண்டே இருந்தார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் சலிக்காமல் வாசிக்கிறார்கள். அம்மா வைத்த கண் வாங்காமல் மஞ்சத்தின் அழகில் லயித்திருந்தார். அதை நான் அறியா விட்டாலும் என்னை குனிந்து பார்க்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சம் கதையை அவர் பக்கத்துவீட்டு மீனாச்சி அத்தைக்கு சொல்லிக்கொண்டு இருந்தநேரம் நானும் ஓரமா நிண்டு கேட்டுக்கொண்டு இருந்தேன். அப்பா வுடன் அண்டைக்கு தான் முதன் முதல் கதைத்தாராம்.

"பதினெட்டு வயசில நான் நல்ல வளத்தி. பாக்கிறவன் எல்லாம் மேய வெளிக்கிட்டான்கள் தெரியுமேடி? மற்றவங்கள் கண்களால் மேயுறதும் நக்கலும் அடிக்க அந்தாள் கிட்ட வந்து கேட்டதும் எனக்கு நடுக்கம் வந்திட்டு. திரும்பி பாக்காமல் மஞ்சம் மட்டும் கண்களில் நிரம்பி நிக்க கனவில் பதில் சொன்னனான். முதலில என்ன கேட்ட வர் தெரியுமே? அந்த மஞ்சத்தை விட அழகா இருக்கிறீர் வடம் பிடிக்க ஆசையா இருக்கு என்று பெரிய கவிஞன் எண்ட நினைப்பில். இப்ப நினைச்சாலும் சிரிப்பு வருது. வயலுக்க சணல் ஆழுய ரத்துக்கு வளர்ந்து நிண்டதும் அடிக்கிற காத்துக்கு சல சல சத்தமும் அவரை எண்ட காதுக்கு கிட்டவந்து பேசச் செய்தது எனக்கு கூச்சத்த தந்தத எப்படி சொல்லுறது. வெக்கம் கெட்ட மனுசன்." இப்படி சிலாகித்த அம்மா முடிவில் முகத்தை சோகத்தோடு கொஞ்சம் கோபத்தை வைத்துக்கொண்டு சொன்னார். "அடுத்த மஞ்சத்துக்கு முன்னம் இவன வயித்தில தந்திட்டு போன மனுசன பிறகு நான் காணவே இல்லை. எப்பவாவது ஒரு மஞ்சத்துக்கு திரும்பி வரட்டும் எண்டு தான் வருசா வருசம் இந்த மஞ்சத்த பாக்கவாறன்."

எனக்கு கால் உளைய அம்மாவின் கையை பலவந்தமாக இழுத்தேன். இன்னொரு குச்சி ஐஸ் வாங்கித்தா என்று அடம்பிடிக்க முறைத்து பார்த் தார். இரவில கனக்க குடிச்சால் காச்சல் வந்திடும் என்று வசை விழுந்தது. மஞ்சம் பார் எவ்வளவு அழகா இருக்கு என்று என் மனத்தை மாற்ற சொல்லிக் கொண் டார். நானோ விடுவதாய் இல்லை. கடைசியில் காட்டமாக உறுக்கினார். "இந்த மஞ்சம் அப்பாவுக்கு எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? அவருக்கு பிறந்த உனக்கு ஏனடா பிடிக்குதில்லை" என்று பரிதாபமாக கேட்டார்.

..................

பெரிசான பிறகு இப்பதான் இரண்டாந்தரம் சாரி கட்டியிருப்பாள் என்று நினைக்கிறேன். மடக்கு மடக்கு என்று காலுக்குள் சிக்குப்பட நடந்து வந்தாள். தாவணியை சட்டையின் மேல் பக்கம் பிடித்து வைத்திருக்க ஊசி குத்தியிருந்தாள். இருந்தும் நழுவும் பிரமையில் கையால் மேலே மேலே இழுத்து விட்டுக்கொண்டு நடந்தாள், வழியாத முடியை புருவத்தில் வாரும் நடிகை போல. தலையில் கனகாம்பர மாலை. அதே வண்ணத்தில் சேலை அவளின் நிறத்துக்கு ஏகப்பட்ட பொருத்தம். நான் அவளையே பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நின்றேன். நண்பர்கள் என்னைத்தான் பார்த்து சிரிக்கிறார்கள். இரண்டு நாளாக என்னை வெட்கப்பட வைத்தார்கள். அதற்குக் காரணமும் இருக்கிறது.

ஏனெனில் நானும் அதை விரும்பி னேன். உள்ளூர இருந்த விருப்பம் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. மீண்டும் மீண்டும் சொல்லி என்னை மாற்றினார்கள். நானும் மாறிவிட்டேன்.

உயர்தர மாணவர் ஒன்றுகூடலுக்கு என்று வரிசையாக அடுக்கி வைத்தி ருக்கும் இருக்கைகள். அலங்கார மண்டபம். அதிலே வண்ண சரிகைகளின் அணிவகுப்பு. பதின்ம வயது நண்பர்க ளுடன் நானும் அமர்ந்தேன். என்னருகில் ஏற்கனவே முறைப்படி வழங்கப்பட்ட இருக்கை இலக்கங்களின் அடிப்படை யில் அவளும் இருந்தாள். நடுவில் ஒலி வாங்கியுடன் நின்றவன் விளையாட் டுகளை ஒழுங்குபடுத்தினான். எனக்கு அதில் கவனம் செலுத்த மனமில்லை. எங்கோ வானத்தில் பறக்கும் உணர்வு. அடிக்கடி அவளின் சேலை என்னில் படுகிறதா என்று பார்க்கிறேன். தவறியும் அது படவில்லை. பேரைச் சொல்லி அறிமுகப்படுத்தினேன். அவளிடம் பெயரைக் கேட்கவில்லை. அதுதான் எனக்கு தெரியுமே. அவளுக்கும் அது தெரிந்ததால் அவளும் சொல்லவில்லை. சாப்பிடும்போதும் பக்கத்தில் இருந் தாள். ஓரிரு வார்த்தைகளுடன் நிறுத்திக் கொண்டேன். வார்த்தைகள் வரவில்லை மனது தொடர்ந்து பேசிக்கொண்டது அது பேசும் வேகம் வார்த்தை பிரயோ கத்தை விட பலமடங்கு அதிகம் போலும். வார்த்தைகளை இரசிக்கவும் தொடங்கிவிட்டேன். அவள் பேசிய வார்த்தைகளை மட்டும். அவளுக்கு பக்கத்தில் இருப்பது போலவும் இல் லாதது போலவும் இருந்தாலும் நான் அருகிலே இருக்கிறேன்.

..................

மானிப்பாய் பட்டினம் கோலா கலம் கொள்ளும் நாள். மருதடியான் கொடியேற்றம் என்றால் கோலாகலம் மட்டும் இன்றி தூய்மையும் பக்தியும் பிரவாகம் எடுத்து ஓடும். அந்த ஓட்டம் அடுத்த 18 நாட்களுக்கு குறைவின்றி இருப்பது மட்டும் இல்லை. மஞ்சம், சப்பரம், தேர், தீர்த்தம் என்று இன்னும் விசேட நாட்களில் எழுச்சியுடன் கரை புரண்டு ஓடும். கணபதிப்பிள்ளை கடைக்காரரின் தண்ணீர் பந்தல் மானிப் பாய் யாழ்ப்பாண வீதியில் கடைக்கு முன்னால் கிடுகால் கூரை போட்டு அளவில் பெரிதாக இருக்கும். மோரும் ஊறுகாய் தண்ணியும் வாயை நனைத்து வயிற்றை நிறைக்கும். காண்டாவன வெயிலுக்கு அருமையான குளிர்ச்சி. கொடியேற்றம் பகல் திருவிழாவில் சாதாரணமாக நண்பர்கள் கூட்டம் அதில் நானும் கலந்தேன். அந்த பகல் தான் நான் நானாக இருந்த கடைசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல். காது கிழிய நடக்கும் மேளச்சமா இடைவேளையில் கதறும் ஒலிபெருக்கி ஆனாலும் எனக்கு எரிச்சலை தரவில்லை. கும்புடுறது, சுவாமி காவுறது, நண்பர்களுடன் அரட்டை, அழகான பெண்களை சைட் அடிப்பது இதை விட வேற என்ன வேணும். உள்மனம் பாரம் இல்லாமல் கழிந்த பகல். மனதுக்கு பாரம் தருவது கவலை மட்டும் இல்லை மகிழ்ச்சியும்தான் என்று அப்போது தெரியவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு வேலைகள் மாறிவிட்டேன். இப்ப செய்யும் இரண்டாவது வேலை பிடித்துப் போய் தொடர்கிறேன். இது வரை காதல் பலதடவை என் மனக் கதவை தட்டிவிட்டது. அனைத்தும் அழையா விருந்தாளியாக வாசலுடன் அனுப்பிவிட்டேன். எல்லாவற்றுக்கும் காரணம் இருந்தது. அதற்கு வியாக்கியானம் சொல்ல நான் ஆயத்தமாக இருந்தேன்.

இதெல்லாம் கொடியேற்ற நாளின் இரவு திருவிழா மட்டுமே. அவளை காணும் மட்டுமே. நாலரையோ ஐந்து வருடங்களின் பின்னர் அன்று காணும் வரைக்குமே. உண்மையில் விரும்பியிருந்தால் ஏன் அதுவரை தேடவில்லை? அந்த முகமே மறந்து போன எனக்கு அந்த மாலை என்னை மாற்றியதா? உள்ளூர எப்போதோ ஒரு தேடல் இருந்திருக்கிறது. அது என்னை அறியாமல் விழித்து விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஒலிபெருக்கி மாலை மூன்று மணியில் இருந்து கத்திக்கொண்டு இருக்க வேண்டும். கல கலவென்று வழமையாக கத்தும் குருவிகளும் மற்ற பறவைகளும் இல்லாமல் மருத மரம் சோபை இழந்து நின்றது. அதற்கு கீழே நான்கு நீர் குழாய்கள். அதுதான் கால்கழுவும் இடம். பிறங்காலை திருப்பி நீரை அதில் படச்செய்வது என்ற கடினமான வேலையை செய்ய முற்படுகிறேன். சனி வாசம் செய்யும் பின் குதி என்று அப்பா சொல்லுவார். அதை கழுவுவதில் உள்ள சிரமம் பெரும்பாலும் கழுவினவர்கள் காலை பார்த்தால் தெரியும். நீர் பின் குதியை நனைக்கும் போது எனது கவனம் சிதறாமல் ஒன்றைக் காலில் நிற்கிறேன். கால் சங்கிலி கணீர் என்றது. வெடுக்கென்று திரும்பினால் வாசனை முகத்தில் அறைந்து மூக்கின் வழி இறங்கியது. மல்லிகை கூந்தலில் இருந்ததா? இல்லை பட்டுச் சேலையில் இருந்ததா? அல்லது இரண்டிலும் இருந்ததா என்று குழம்பிவிட்டேன்.

அப்போது திரும்பிய அவளின் முகம் என்னை கணப்பொழுதில் உறிஞ்சி குளிர்பானம் இல்லாத குடுவை ஆக்கியது. அடுத்து வந்த புன்முறுவல் புது வெள்ளமாக நிறைத்ததும் நிஜ உலகுக்கு வந்தேன். எப்படி இருக்கிறீங்கள்? என்னை தெரிகிறதா? என்று கேட்டதும் பரஸ்பரம் பரிமாறிய ஓரிரு வார்த்தைகள் அந்த இரவை மட்டும் அல்ல அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை

என். கே. வேணி



பலாங்கொடையைச் சேர்ந்த இவர் கவிதைகள் மூலமாக இலக்கிய உலகத்துள் பிரவேசித்து தற்போது சிறுகதை உலகிலும் தன் முத்திரையைப் பதித்து வலம் வருகிறார். மனிதர்களுக்கிடையில் உள்ள நுண்ணிய உணர்வுகளை தன் கதைகள் மூலமாக வெளிக் கொணர்பவர்.


மார்கழி மாதத்து முன்பனியில் நனைந்திருந்த முற்றத்தை கூட்டி கோலம் போட்டு முடித்து நிமிர்ந்த சவீதா வாசலில் பனித்துளியில் நனைந்திருந்த மல்லிகை பூவின் மனத்தையும் எங்கும் வியாபித்து காணப்பட்ட பனி மூட்டங்களையும் பார்த்து ரசித்து கொண்டிருந்தவள் நிஜ உலகை மறந்து கற்பனை உலகில் சஞ்சரிக்க தொடங்கினாள். அதற்கேற்றாற் போல் பக்கத்து வீட்டு வானொலியிலிருந்து "காலைத்தென்றல் பாடி வரும் ராகம்" என்ற இனிமையான பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

என்ன? சவீதா இன்னும் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் கெதியாய் வந்து எனக்கு சாப்பாட்டைத் தா எனக்கு ஆபீசுக்கு போக நேரமாகிறது என்று தன் கணவன் நரேனின் குரலை கேட்ட பின்னே சுய நினைவுக்குத் திரும்பினாள். சாப்பாட்டையும் தேனீரையும் கணவனுக்கு கொடுத்து அவனை வழியனுப்பிவிட்டுத் தானும் ஒரு தேனீர் கோப்பையை எடுத்துக் கொண்டு வந்து முன் ஹாலில் வந்து அமர்ந்து தேநீரை பருகத் தொடங்கியபோது தனிமையில் இருந்த அவளின் மனக்கதவு மெல்லத் திறந்து கடந்த காலத்தை நோக்கி வட்டமிடத் தொடங்கியது.

சிறு வயது முதலே வாசிப்பில் ஆர்வம் கொண்ட சவீதா, தானும் ஏன் எழுதக்கூடாது என்ற எண்ணம் எழ பாடசாலை படிக்கும் காலங்களிலே எழுத தொடங்கினாள். இதனால் பாடசாலையிலே பல ஆக்கங்கள் எழுதி பரிசுகள் பெற்றாள். படிப்பு முடித்து பின்னரும் எழுத்துத்துறையை நிறுத்தாமல் தொடர்ந்து எழுதி வந்தாள். இதனால் இவளின் ஆக்கங்கள் வானொலி பத்திரிகைகளில் அதிகம் இடம் பெற்றதோடு பலரின் பாராட்டுக்களும் பெற்றன. அப்படி விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேச்சை ஆரம்பித்தனர். தன் எழுத்துத் துறைய ஆதரிக்கக் கூடிய ஒருவரையே திருமணம் முடிக்க எண்ணி இருந்த சவீதாவுக்கு நரேனை திருமணம் முடிப்பதில் இரட்டிப்பு சந்தோஷம் ஏற்பட்டது எனவே இரு வரும் பெரியோரின் ஆசிப் படி இல்வாழ்வில் இணைந்து தம்பதிகளா யினர்.

ஒரு வங்கியில் கணக் காளராக பணி புரிந்த நரேன் திருமணத்தின் பின் சவீ தாவை தனது ஊருக்கே அழைத்து போய்விட்டான். எனவே சவீதாவும்

எழுதிய ரசிகர்களில் ஒருவன் தான் நரேனும். பட்டை தீட்டினால் போல் இரத்தின சுருக்கமாக அமைந்த நரேந்திரனின் விமர்சனங்கள் சவீதாவை வெகுவாக கவர்ந்தன. கையடக்க தொலைபேசியிலும் முகநூலிலும் அவனின் குறுந் தகவல்கள் கண்டவுடன் பதிலுக்கு நன்றி கூறி உடனே பதிவு செய்து விடுவாள். இப்படியாக ஏற்பட்ட தொடர்பு நாளடைவில் நெருக்கமான உறவாகவும் நட்பாகவும் மாறியது.

இப்படியாக தொடங்கிய நட்பு நாளடைவில் காதலாக மாறியது. அதன் பின் இருவரும் நேரடியாகச் சந்தித்து காதலை வளர்த்தனர். இந்த விடயம் இரு வீட்டாருக்கும் தெரியவர கல்யாண

தொடர்ந்து எழுதுவதை நிறுத்தாமல் திருமணத்தின் பின்னும் எழுதத் தொடங்கினாள். சவீதாவின் கவிதை ஒன்றை சுவாரசியமாக வாசித்து கொண்டிருந்த நரேன், தேனீருடன் அருகில் வந்து நின்ற சவீதாவை அவன் கவனிக்கவே இல்லை. சிறிது நேரம் நின்ற சவீதா என்ன? கணக் காளர் சேர்! நான் வந்து நிற்பதைக் கூட கவனிக்காமல், அப்படியே கவிதையில் மூழ்கி விட்டீர்கள்.

பரவாயில்லை கணக்கு பார்க்க மட்டும் தான் உங்களுக்குத் தெரியும் என்றிருந்தேன் . பரவாயில்லை கவி தையையும் ரசிக்க தெரிகிறதே நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிஷ்டகாரி தான்.

எங்கே உண்மையைச் சொல்லுங்கள் ,நீங்கள் என்னை "லவ்" பண்ணுகிறீர்களா? அல்லது என் கவிதையை "லவ்" பண்ணுகிறீர்களா? என்று அவள் குறும்பாய் கேட்க... அவனும் பதிலுக்கு அது வந்து சவீதா நான் முதலில் உன்னை காணுமுன் ரசித்தது உன் கவிதையை தானே. அதன் பின்தானே உன்னை கண்டேன். என் முதல் காதலி உன் கவிதையே என்று கூறி கண் சிமிட்டி சிரித்தான். ம்.... போங்கள் என்று செல்லமாய் சினுங்கிய அவள்... நரேனை எண்ணி பெருமையிலும் மகிழ்ச்சியும் திளைத்துப் போனாள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவன் சவீதாவை இலக்கிய கருத்தரங்குகள், நூல் வெளியீட்டு விழாக்கள் என்று அழைத்துப் போவான். சினிமா படம் பார்ப்போம் என்று அவள் கேட்டாலும் படம் என்றாலும் எப்போதும் வீடியோவில் பார்க்கலாம். இது போல் சந்தர்ப்பங்களை எழுத்தா ளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி அவள் வாயை அடைத்து விடுவான். எனக்கு வீட்டு வேலைகள் இருக்கின்றது என்று சவீதா கூறினாலும். இந்தா! பார் சவீதா வீட்டு வேலை எனக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று நீ உன் திறமையை விட்டு விடாதே பாரதியார் அன்று கனவு கண்டது போல் நீயும் புதுமை பெண்ணாக இருக்க வேண்டும். என் மனைவி எழுத்தாளர் என்று சொல்வதில் எனக்கும் பெருமைதானே. என்று கணவன் சொன்னதை கேட்ட சவீதா உங்களை போல் நவீன பாரதிகள் இருக்கும் போது எமக்கு என்ன குறை என்று கூறி கேலி செய்வாள்.

அதனை கண்ட தோழிகள் கூட உனக்கென்ன... உன் எண்ணம் போல் உன் எழுத்துத் துறையை ஆதரிக்கும் கணவன் உனக்கு அமைந்து விட்டார். நீ அதிஷ்டசாலிதான். சரி இனி கலக்கு உன் கணவனின் ஒத்துழைப்புடன் எழுத்துத்துறையில் பிரகாஷிக்க வாழ்த்துக்கள் என்று கூறி மகிழ்ந்தனர். சில வேளைகளில் கணவன் அருகில் இருப்பதையும் மறந்து கற்பனையில் மூழ்கிவிடுவாள். அவளின் மௌனத்தை புரிந்து கொண்ட நரேன், "என்ன மகாராணி கற்பனை வானில் பறக்க தொடங்கி விட்டீர்கள் போல" இனி நான் ஏன் தொந்தரவாக இருக்க வேண்டும் என கூறி எழுந்து போய் விடுவான்.

தேநீர் காலியாகி வெகு நேரமாகியும் அந்த இனிப்பான தேநீரை போல் இனிய பழைய நினைவுகளில் மூழ்கி கிடந்த சவீதா தபால்காரனின் மணியோசை கேட்டு திடுக்கிட்டு எழும்பினாள்.

நூல் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த அழைப்பிதழை தபால்காரன், அவளிடம் கொடுத்ததை பெற்றுக் கொண்ட அவளின் பெயருக்கு வந்திருந்த அந்த அழைப்பிதழை பார்த்து முன்போல் அவளால் சந்தோஷப்பட முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் நரேனின் அண்மைக்கால மாற்றமே.... அவனின் செய்கைகள் இப்போது நரேனுக்கு ஒரு முகமல்ல இன்னொரு முகமும் உண்டு என்பதை நிரூபித்து காட்டியது.

வானும் கடலும் நிலவும் மாறாத போதும் மனிதன் தன் எண்ணங்களை அடிக்கடி மாற்றிக்கொள்கிறான், நிறமாறும் குணம் கொண்ட மனிதன். தான் மிகவும் விரும்பிய விடயத்தைக்கூட வெகு சீக்கிரமே வெறுத்து ஒதுக்கி விடுகிறான். இதுதான் யதார்த்த வாழ்வில் மனிதனின் இயல்பு குணம். நரேனும் அதற்கு விதிவிலக்கல்ல. திருமணம் முடிக்கும் முன்னும் முடித்த புதிதிலும் அவளின் எழுத்துத் துறைக்கு ஆக்கங்களை ஆதரித்து ரசிகர்கள் கைபேசியில் பாராட்டுவார்கள் . சிலர் குறுஞ் செய்திளை பாராட்டி பதிவிடுவார்கள். சிலர் இருவரையும் நேரில் கண்டதும்
மிஸிஸ் நரேன் உங்களின் ஆக்கங்கள் யதார்த்தமாகவும், திறமையாகவும் உள்ளது. தொடர்ந்து எழுதுங்கள், பாராட்டுக்கள்.... வாழ்த்துக்கள் என்று சவீதாவை புகழ்வார்கள். இதை கண்ட நரேன் முன்பு போல் சந்தோஷப்பட்டு அவளை பாராட்டவில்லை. தன்னை யாரும் மதிப்பதில்லை தன் மனைவியைதான் எல்லோரும் புகழ்கிறார்கள். தான் மற்றவர்களால் ஒதுக்கப்படுவதாக கற்பனை பண்ணி அவனுக்கு தாழ்வு மனப்பான்மை ஈகோ நிலை உருவானது. சில நண்பர்கள் இவனிடமே உன் மனைவி நன்றாக எழுதுகிறார். எல்லா பத்திரிகை வானொலிகளிலும் அவளின் பெயர்தான் வருகிறது என்று கூறவும் மனைவி சவீதாவின் புகழ் வளர்ந்து அவளைப் பற்றியே எல்லோரும் கதைப்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவனும் ஒரு காலத்தில் அவளின் ஆக்கங்களை ரசித்து ரசித்து வாசித்து பாராட்டியதை மறந்தே போனான். அதன் எதிரொலியாக அவள் ஏதும் எழுதுவதை கண்டாலோ, அல்லது யாராவது தொலைபேசியில் கதைத்தாலோ " சும்மா தேவையில்லாமல் எந்தநேரமும் என்ன எழுதிக்கொண்டு இருக்கிறாய்? எந்த நேரமும் போனில் வேறு கதை... என்று எரிந்து விழுவான். ஏதாவது காய்கறி நட்டாலும் சமையலுக்கு உதவும் என்பான். அவனின் உடைகள் ஏதும் கழுவ மறந்து போயிருந்தால், உனக்கெங்கே அதற்கெல்லாம் நேரம் இருக்கிறது. எந்த நேரமும் எழுதவும் போன் கதைக்கவுமே நேரம் இருக்கிறது என்பான் கோபமாக.

ஏதாவது கதை எழுதுவதற்காக கருதேடி கற்பனையில் மௌனமாக இருந்தால் "என்ன ?மகாராணி எந்த கோட்டையில் எந்த ராஜாவை பிடிக்க யோசனை எந்த ராஜா என்று யாருக்குத் தெரியும்" என்று இதயத்தில் ஈட்டி பாய்ச்சுவதைப்போல வார்த்தைகளை வீசி எறிவான். சில நேரங்களில் முன்பு அவனிடம் கதைப்பது போலவே கதை கவிதை சம்பந்தமாக பத்திரிகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்தது வானொலியில் ஒலிபரப்பானது என்பதை பற்றி கதைப்பாள். உடனே நரேன் கோபமாக! எனக்கு இப்போது உன் கதையை கேட்க நேரமில்லை எனக்கு வேலை இருக்கிறது என்று முகத்தில் அடிப்பதைப் போல் கூறி எழும்பி போய்விடுவான். நரேனின் இந்த போக்கை கண்டு சவீதா எதிர்பாராத நேரத்தில் மின்னல் தாக்கியது போல் தடுமாறிப் போனாள். இந்த நரேன் ஏன் இப்படி மாறிவிட்டார். என்ற கேள்வியே எழுந்தது? நான் என்ன பிழை செய்தேன்? என்ன குறை வைத்தேன் என்று யோசித்து யோசித்து குழம்பி போனாள்.

மாலையில் வீட்டுக்கு வந்த கணவனுக்கு தேநீரை கையில் கொடுத்த சவீதா என்னங்க பாரதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எழுத்தாளர்கள் மன்றத்தினரால் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப் போகிறார்களாம் என்னையும் கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு வந்துள்ளது. நான் போன தடவையும் கூட்டத்திற்கு போகாதபடியால் இம்முறை என்னை கட்டாயம் வரும்படி கூறினார்கள் எனவே நான் கூட்டத்திற்கு போகணும் நரேன் ப்ளீஸ்.... என்று சவீதா கூறியதை கேட்டதும் இந்த பார் சவீதா! இந்த வேலையில்லாதவர்கள் நடத்துகிற கூட்டத்திற்கெல்லாம் நான் வரலை, ஏதாவது தொழில் செய்து உருப்படியாக உழைக்கலாம் சும்மா கதை கவிதை எழுதுறன் என்று மற்றவர்களின் நேரத்தையும் பணத்தையும்வீணாக்கிற கூட்டம் அது. உனக்கு விருப்பமானால் நீ போ, என்னை இனிமேல் தொந்தரவு பண்ணாதே, உனக்கு எத்தனை தரம் சொல்றது இந்த கதையெல்லாம் என்னிடம் கதைக்க வேணாமுனு என்று சத்தமிட்டு கத்தி ஏதோ அவள் கேட்கத் கூடாத ஒன்றை கேட்டு விட்டதை போல் நடந்து கொண்டான்.

மார்பில் ஷெல் பட்டதைப்போல் துடித்துப்போன சவீதா, பொறுமையை இழந்து என்ன நரேன் நீங்க என்னை திருமணம் முடிக்க முன்பே என் கவிதை, கதைகள் ரசித்து ரசிகனாக இருந்து பின் காதலனாக மாறித்தானே இன்று கணவனான பின்னும் என் எழுத்துத்துறையை ஆதரித்துதானே என்னை இந்தளவு உயர்வுக்கு கொண்டு வந்தீங்க. இப்ப நீங்களே இப்படி தடைபோடுறீங்க. உங்க செய்கை மயிலின் ஆட்டத்தை ரசித்தவனே அதனை பிடித்து காலை ஒடித்து கூண்டுக்குள் அடைத்து வைப்பது போல உள்ளது. நீங்க விரும்பி தாலி கட்டிய உங்கள் மனைவிதாங்க நான். எனக்கு சேரும் புகழ் பெருமை எல்லாம் உங்களுக்கும்தான் அதில் பங்கு உண்டு என்று கண்ணீரோடு சவீதா கூறியதை கேட்ட நரேன்.

இந்தா பார்! அதெல்லாம் முந்தி இப்போ எனக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. நீ வேலை வெட்டி இல்லாம கதை, கவிதை எழுதுறதும், அதை ரசிக்க ஒரு கூட்டமும், பாராட்டி போன் பண்ணவும், குறுஞ் செய்தி அனுப்பவும், அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமா ஆபீசுக்கு போனாலும் வெளியில் போனாலும், வீட்டுக்கு வந்தாலும் உன்னை பற்றியே என் நண்பர்கள் எந்த நேரமும் என்னிடம் கதைக்கிறாங்க. நீ நினைக்கிற மாதிரி எனக்கு அதில் ஒன்னும் பெருமையோ, புகழோ இல்லை தொந்தரவாகவே உள்ளது என்று கோபத்தில் எரிமலையாக குமுறினான்.

கணவனின் மனநிலை இப்போது புரிந்தது அவளுக்கு சராசரி ஆண்க ளைப்போல் தன் மனைவியை வேறு நண்பர்கள் புகழந்து கதைப்பதை ஏற்றுக் கொள்ளாத பொறாமையுடன் கலந்து வரும் தாழ்வுமனப்பான்மைதான் கார ணம் எனவே அவனிடம் எழுத்துலக சம்பந்தமாக எந்த விடையத்தையும் கதைப்பதை தவிர்த்துக் கொண்டாள். கணவன் இருக்கும்போது எழுதுவ தையும் நிறுத்திக் கொண்டாள். கணவன் மனைவி இருவருமே ஒருவரின் விருப்ப வெறுப்புக்களை உணர்ந்து மதித்து நடக்க வேண்டும். ஆனால் அடிமைப் பட்டு வாழக்கூடாது பிற்போக்கான எண்ணம் கொண்ட கணவனின் ஈகோ பிரச்சினையால் திறமையான மனை வியின் தகைமைகள் புதைக்கப்படக் கூடாது, என்று எண்ணிய சவீதா, நரேன் வேலைக்குப் போன பின் எழுதினாள். ஆடிய பாதத்தையும் பாடிய வாயையும் நிறுத்த முடியாது என்பது போல் தொடர்ந்து எழுதிய அவளால் உடனே எழுதாமல் நிறுத்த முடியவில்லை. காட்டாறு வெள்ளத்திற்கு அணை கட்ட முடியாது. எனவே அவள் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருந்தாள். பலவாறு யோசனையில் மூழ்கியிருந்த சவீதாவுக்கு பாரிதியாரின் பாடல் நினைவுக்கு வந்தது..

**நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியிலெறிவ துண்டோ? சொல்லடி சிவசக்தி என்னைச் சுடர்மிகு மறிவுடன் படைத்து விட்டாய் வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழவதற்கே சொல்லடி சிவசக்தி** வார பத்திரிகை ஒன்றிலே பாரதி யாரின் பிறந்தநாளை முன்னிட்டு சிறு கதைப் போட்டி ஒன்று நடாத்தப்ப டுவதாகவும் பரிசு பெறுபவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட இருப்பதாகவும் என்ற செய்தியை வாசித்த சவீதாவின் உள்ளம் கற்பனை வானில் சிறகடித்து பறக்க தொடங்கின. பெண்களின் விடுதலைக்காக குரலெழுப்பிய அவரின் பிறந்தநாளுக்கு, கட்டாயம் பெண் ணாகிய நான் கதை ஒன்று எழுதியனுப்ப வேண்டும் என்று மனஉறுதியுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எழுதி ஒருவாறு போட்டிக்கு அனுப்பி விட்டாள்.

ஒரு மாதம் கடந்து விட்ட பின் ஒருநாள் காலையில் தேநீர் கோப்பை யுடன் நரேனிடம்வந்த போது வானொலி செய்தியில் பாரதியாரின் நினைவு நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட சிறுகதை போட்டியில் முதலாம் பரிசை பெறுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. சவீதா நரேந்திரன் அவர்கள். இவருக்கு ஜனாதிபதியால் பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப்படும். இதுகாலம் வரை நடாத்தப்பட்ட இப்போட்டியில் இம்முறை ஒரு பெண் எழுத்தாளர் சிறந்த கதைக்கான முதலாம் பரிசை பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இது அன்று பாரதியார் கண்ட கனவை இவர் நன வாக்கியுள்ளார் என்றே கூற வேண்டும். இந்த அறிவிப்பை கேட்ட நரேந்திரன் அருகில் நின்ற சவீதாவின் முகத்தை பார்க்க துணிவில்லாமல் அன்றைய பத்திரிகையை வாசிக்க கையில் எடுத்தான் சவீதா பரிசு பெறப்போகும் செய்தி முதற்பக்கத்திலே காணப்பட்டது.

அதையும் பார்க்கக் கூசி நிமிர்ந்த நரேனின் முன்னால் இருந்த தொலைக் காட்சி செய்தியிலும் வாசிக்கப்பட்டது. எல்லாவற்றையும் நரேனையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் சவீதா அங்கு அமைதியாகவும், சந்தோஷ மாகவும் நின்றாள்

நரேனின் நிலை மிகவும் தர்ம சங்கடமான நிலையாக மாறியது. குற்ற உணர்வில் தவித்துப் போனான், ஓடவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் சிலைபோல அமர்ந்திருந்தான். செய் தியை அறிந்தவர்கள் எல்லோரும் சவீதாவை தொலைபேசி மூலம்

பாராட்டி கொண்டு இருந்தார்கள் அது மட்டுமா நரேனின் நண்பர்களும், சவீதா வின் எழுத்துலக நண்பர்கள் தோழிகள் எல்லாம் நரேனின் வீட்டிலே பாராட்டு விழா நடாத்த ஏற்பாடு செய்து விட்டார் கள். மாலைநேரம். நரேனின் வீட்டில் விழா மகிழ்ச்சியாக நடந்து கொண்டி ருந்தது. நரேன் மட்டும் குற்ற உணர்வில் தவித்துக் கொண்டிருந்தான். உலகிற்கு ஒளி தரும் நிலவும் களங்கம் கற்பிப்பதைப் போல் முழு நிலவாக, ஒளி கொடுக்க வேண்டிய சவீதாவின் திறமையை தேய்பிறையாக ஆக்க எண்ணினேன் ஆனால் களங்கமில்லா பூரண நிலவு என்பதை நிரூபித்து விட்டாள். நான்தான் பொறாமையாலும் தாழ்வுச் சிக்கலாலும் கண்மூடிதனமான நிலைக்கு தள்ளப் பட்டுவிட்டேன். என்னை நினைக்க எனக்கே வெட்கமாக இருக்கிறது. சே .... அதுவும் சொந்த மனைவியிடமே..... நினைக்கவே வேத னையாக உள்ளது, என்று பலவாறு சிந்தனையில் ஆழ்ந்தி ருந்தவனின் சிந்தனையை..... சவீதாவின் தோழி ஒருத் தியின் குரல் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தன. "சவீதா உனக்கு இப்படி பரிசு கிடைத்ததற்கு உன் திறமை மட்டுமல்ல காரணம் உன் எண்ணத்தை புரிந்து கொண்டு உன் எழுத்துத் துறையை ஆதரித்து உனக்கு பக்க பலமாக இருந்த உன் கணவனையே சாரும் என்று கூற இதுவரையில் தன் அறியாமையினால் தன் மனதில் இருந்த இருளை அகற்றி தெளிந்தமனதுடன் சவீதாவை நெருங்கி என்னை மன்னித்து விடு என்று மெதுவாக கூறி கைகளை பற்றி வாழ்த்து சொன்ன நரேனை பார்த்து நண்பர்கள் எல்லாம் ஆரவாரமாக கைதட்டி சிரித்து, ஆ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னல் ஓரப் பயணம்



திருகோணமலையில் வதியும் இவரின் இரண்டாவது சிறுகதை இது. ஆர்வமும் துடிப்புமுள்ள இவர் மேலும் சிறுகதைகளைப் படைப்பார் என்று எண்ணுகிறோம்.

பொதுவாக பயணங்களின் போது ஜன்னல் ஓர இருக்கைக்கு அடிபடாதவர்கள் இல்லையென்றே கூறலாம். உறவுகளோடு சண்டையிட்டு ஜன்னலோர இருக்கையில் அமர்வதென்றால் ஓர் அலாதி பிரியம்.

நான் பயணங்களுக்கு பிரியப்பட்டவள். பயணங்களின் போதான அடுத்த நொடி ஆச்சார்யங்களுக்காக காத்திருப்பது மிகவும் சுவாரசியமானது. அதுவும் இந்த ஜன்னல் அருகே அமரும் வாய்ப்பு வந்தால்!

கனவுகளுக்கும் நிஜங்களுக்கும் நடுவே நீண்டிருக்கும் பாதைகளை ஜன்னல் ஓரமாகவே பலர் கடக்கின்றார்கள். நான் சிறுவயதில் ஜன்னல் கம்பிகளை பற்றிக் கொண்டு கடந்து சென்ற காட்சியெல்லாம் கண்களில் நிரம்புகிறது. சில வேளைகளில் யன்னலூடாகத் தலையை வெளியே நீட்டி காற்றிலே மயிர்களைப் பறக்கவிட நிரம்ப ஆசை. சிறுவயதிலிருந்தே எனக்கு பேருந்துப் பயணம் பரிச்சயமானவொன்று. நானும் எனது சகோதரியும் வெள்ளிக்கிழமை



**திருமலையாள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்தவுடன் அம்மம்மா வீட்டிற்கு செல்வதை ஒரு வாடிக்கையாக வைத்திருந்தோம். அடித்துப் பிடித்து ஜன்னலோரம் அமர்ந்து கொண்டால் கேட்கும் முதல் வார்த்தை "கைய உள்ள எடு, தலைய உள்ள எடு" என்பது தான். அப்போதெல்லாம் நினைப்பேன் இந்திர லோகத்தில் நா. அழகப்பன் படத்தில் வரும் அழகப்பனை ஆரியமாலாவும், சூரியமாலாவும் தூக்கிக் கொண்டு போவதுபோல என்னையும் ஒரு பட்டாம் பூச்சி தன் கால்களால் தூக்கிக் கொண்டு இந்த ஆகாசத்திற்கு அப்பால் போட்டு விடாதா என்று!

ஆனால் வளர்ந்துவிட்ட பிறகு உலகின் கதவுகள் திறந்து கொண்டு விட்டன. அதன் பின்னரான ஜன்னலோர நினை வுகள் அனைத்தும் சுதந்திரமாக நான் தனியே அனுபவித்தவையாக மாறிவிட்டன. ஜன்னலோரம் அமர்ந்தி ருந்து இயற்கையை ரசிப்பதென்றால் யாருக்குத்தான் பிடிக்காது?

ஒருதடவை நான் எனது சான்றிதழ் வாங்குவதற்காக கொழும்பிற்கு பயணம் செய்யவேண்டி இருந்தது. அன்று செய்தியில் இடியுடன் கூடிய கனமழை வருமென அறிவுறுத்தியி ருந்தனர். ஆனாலும் போக வேண்டிய கட்டாயத்தில் எதையும் பொருட்படுத் தாது ஆயத்தமாகி விட்டோம். இரவுப் பயணம் என்பதால் ஹபரனை செல்லும் வழியில் யானைகளின் வருகையும் ஒருபக்கம் பீதியைக் கிளப்பியிருந்தாலும், மறு பக்கம் எப்போது கொழும்பு போய் இறங்குவோம் என்றிருந்தது. அம்மாவை தொங்கலில் விட்டுவிட்டு நான் ஜன்ன லோரம் அமர்ந்துவிட்டேன். பேரூந்தில் போகும் பாடல் எரிச்சலாக இருந்தாலும் என்னை மறந்து நானே பாட ஆரம் பித் தேன். அது வேறு யாருடைய பாடலு மல்ல இளையராஜாவின் பாடல். "ராஜ ராஜ சோழன் நான்..." எனும் இளையராஜாவின் பாடலுடன் பேரூந்து பிரயாணம் ஆரம்பமாகியது. "ஜன்ன லோரம் இளையராஜாவின் பாடல்" ஆஹா இதைவிட ஒரு பயணத்தில் வேறு என்ன வேண்டும்? என்று நினைக் கத் தோன்றாமலில்லை! கந்தளாயை பேரூந்து தாண்டியது. நானும் அம்மாவும் நித்திரை தேவன் அழைத் தவுடனே சென்றுவிட்டோம். திடீரென ஒரு சத்தம் "யானை யானை" என்று, சடாரென விழித்துக்கொண்டு வந்த இடம் என்ன என்று பார்த்தால் ஹபரனை. "என்னம்மா உண்மையாவே யானையா?" என்று தூக்கக் கலக்கத்தில் ஜன்னல் கண்ணாடியால் பார்த்தால் யானை என் முன்னே தான் நிற்கிறது. பீறிட்டு கத்திக் கொண்டு அம்மா எனக்கு பக்கத்தில தான் யானை என்று முழுங்கி முழுங்கி சொல்லும் போதே அம்மா என்னை எழுப்பி பேருந்து இருக்கைக ளின் நடுவில் நிறுத்திவிட்டார். அனை வரும் செய்வதறியாது மிலாந்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதியுடன் இருந்தோம். சிலர் இதயத் துடிப்பு அதிகரிப்புடன் இந்த யானை என்னதான் செய்கிறதென்று பார்ப்போமே என வீடியோக்கள், படங்கள் என்று அந்தப் பயங்கரமான நினைவுகளை சேகரிப்பதற்காக எடுத்துக் கொண்டிருந்தனர். மழை பலத்து பெய்து கொண்டிருந்ததால் ஓட்டுனருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. யானை காட்டிற்குள்ளே போகு மட்டும் பல வாகனங்கள் அமைதி காத்து நின்றன. ஓட்டுனர்கள் சைகையின் மூலம் யானையின் நகர்வை அடிக்கடி அறிந்து கொண்டு அதன்வழியே செயற்பட்டனர். இப்படியாக ஒரு முப்பது நிமிடத்திற்கும் மேல் போராடி ஒருவாறு யானை மெதுவாக எங்களது அவசரம் தெரியாது ஆடி ஆடி காட்டிற் குள் சென்றது. அது செல்லுமட்டும் பேரூந்திலிருக்கும் அனைவரும் வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக்கொண்டி ருந்தோம். ஒருவாறு யானை போய்விட ஓட்டுனர்கள் அவர்களின் சைகை மொழியில் கோர்ன் (Horn) அடித்து நன்றி சொல்லி பயணத்தை ஆரம்பித்தனர். அன்றைய ஜன்னலோர பயணம் பயங்கரமாக இருந்தது. ஒரு வேளை மதம் பிடித்த ஆண் யானையாக இருந்தால் நான் இப்போது இந்த ஜன்னலோர நினைவுகளைப் பகிர்ந்திருப்பேனா என்பதும் ஆச்சரியம் தான்!

வாழ்க்கையும் இப்படித்தான். யன்னலோரப் பயணம்போல் நகர்ந்து கொண்டிருக்கும். இறங்கவேண்டியவர்கள் இடையில் இறங்கிவிடுவார்கள். மற்றவர்கள் தங்கள் இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அள்ள அள்ளக் குறையாமல் கொடுக்கும் அக்சய பாத்திரம் போல இந்த ஜன்னலோரத்தில் இருந்து பயணம் செய்யும்போது வரும் நினைவுகளுக்குப் பஞ்சமேயில்லை.

ஒவ்வொரு ஜன்னலோரமும் கண்ணீர், சிரிப்பு, துக்கம், ஏமாற்றங்கள், தேடல், அறியா முகங்களின் அறிமுகம், உறவுகளின் பிரிவு, பயணம் ஆரம்பிக்கும் தருவாயில் கிடைக்கும் பொருள் இப்படி எத்தனை எத்தனையோ நிகழ்வுகள் கடந்து வந்திருக்கும். இந்த ஜன்னலோரப் பயணம் உணர்ச்சிகளின் வெளிப்பாடென்றே கூறலாம். என்றோ சந்தித்து போன சில காட்சிகளை மனது இன்றைக்கும் சுவாசிக்குமானால் அது நாம் நேசித்த நிமிடங்களாகத் தான் இருக்கும். அது எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும் சரி. அதுபோலத்தான் இந்த ஜன்னலோர பயணமும்...! சொல்லப் போனால், விலை இல்லாத ஒரு வினோத சுகம் தோன்றும் இந்த ஜன்னலோர பயணத்தின் போது.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பும் பாதிப்பும்

**கதை: ஆழக்கீறல்   ஆசிரியர் : நக்கீரன்மகள்   தொகுப்பு: ஆழக்கீறல்**
**வெளியீடு: மகுடம்**

என்னதான் ஒருதாய் வயிற்றின் உதிரப்பிறப்பாக இருந்தாலும், சகோதரங்களுக்கிடையில் வசதி வாய்ப்புகள் பெருகி, காலநகர்வில் தவிர்க்க முடியாத நிலையில், அவர்களுக்குள் பொருளாதார ஏற்றங்கள் ஏற்படும்போது, பிரிவினை உணர்வு ஏற்பட்டு விடுவதை இச்சமூகத்தில் நாம் அவ்வப்போது காணக்கூடிய நிகழ்வாகவே இருக்கிறது. அதுவும் புலம்பெயர் தேசங்களில்வாழும் சகோதரங்களை ஒரு 'பணம் காய்க்கும் மரம்' ஆகப் பார்க்கும் உரித்து உறவுகளின் மனப்பாங்கானது, விசித்திரமானது மட்டுமல்ல, கொடூரமானதும்கூட. தாயகத்தில் இருக்கும் தங்களது உறவுகள் நாலு மனிதர்களைப்போல் நன்றாக வாழவேண்டும் என்ற சிந்தனையோடு, தம்நலன்நோக்காது... பனி மழை வெயில் தூக்கம் பாராது எந்தத் தொழிலானாலும் மனக்கூச்சமின்றி அதைச் செய்து, அதில் வரும் வேதனத்தில் தமக்காகச் சிறிதளவு சேமித்தும் கொண்டு மிகுதியை தம் உறவுகளுக்காக அனுப்பி விடுகிறார்கள்.

ஆனால், அவர்களோ அந்தப் பணத்தின் பெறுமதிமிக்க மறுபக்க வலியை அறியாது, ஊதாரித்தனமாகச் செலவழித்து வாழ்வதோடு, அச்செலவழிப்பில் தேடிக்கொள்ளும் தேட்டங்கள் மூலம் நாளடைவில் அந்த உழைப்புக்குரியவர்களை உதாசீனப்படுத்துவதை 'ஆழக்கீறல்' எனும் சிறுகதை மூலம் மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார் நக்கீரன்மகள் அவர்கள்.

தாயகத்தில் திருமணத்தை முடித்துக் கொண்டு, ஆறுமாதத்திற்குள் டென்மார்க் புறப்படுகிறான் சங்கர். ஒரு வருடத்தின்பின் அவனது மனைவி செல்வியும் அவனிடம் போய் சேருகிறாள். இவர்களது புலம்பெயர் நிகழ்வுமூலம் இருவரது உழைப்பினூடாக, இருபக்க உறவினர்களின் வீடுகளில் திருமண நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சங்கர் - செல்வி இருவரது திருமணத்தின்பின், மூன்றுவருடங்கள் கழிந்த நிலையில், அவர்களுக்குப் பெண் குழந்தை கிடைக்கிறது. அதன்பின்... செல்வியின் வயிற்றில் இரண்டாவது குழந்தை வளர்வதை அறிந்த அவளது கணவன், சிலநாள்களுக்கு வீட்டில் இருக்கும்படி கூறிவிட்டு, வேலைக்குச்



**அலெக்ஸ் பரந்தாமன்**

தான் பார்ப்பதை அனுபவிப்பதை மக்கள் இலக்கிய-மாக மாற்றிவிடும் திறமைவாய்ந்த ஒரு எழுத்தாளர். தன் வாசக அபிப்பிராயங்களை பட்டும்படாமல் விமர்சனமாகத் தருவதிலும் வல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவரும் வேளையில், இறந்து விடுகிறான். நாளடைவில்... வாழ்க்கை யோடு போராடிய செல்வி, தனது இரு பிள்ளைகளுடன் தாயகம் நோக்கிய பயணத்துக்கு ஆயத்தமாகிறாள்.

தாயகத்தில் செல்வியின் அண்ணன் கண்ணன் என்பவன் தனது குடும்பத்தோடு, அவர்களது தந்தையும் உடல் இயலாநிலையில் இருக்கிறார்கள். ஏற்கனவே தனது மனைவியையும் மருமகனையும் பறிகொடுத்த அவரைப் பராமரிப்பதற்கும், பணிவிடை செய்வதற்கும் அண்ணனால் ஒழுங்குபடுத்தப்பட்ட சாந்தி எனும் பெண்ணுக்கு மாதாமாதம் செல்வியே பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

அண்ணனுடன் கதைப்பதற்கு பல விடயங்கள் உள்ள ஆவலில், செல்வி தாயகமண்ணில் காலடி எடுத்து வைத்தபின்... நடைபெறும் நிகழ்வுகளும் செயற்பாடுகளும் அண்ணனின் ஆழ்மன சுயவெளிப்பாடுகள் மூலம், கதையைப் படிக்கும் வாசகர்களை செல்விமீது அனுதாபம் கொள்ள வைக்கிறார் கதையின் ஆசிரியை.

விமானத்திலிருந்து தன்பிள்ளைகளுடன் இறங்கிய செல்வி, கொழும்பு - வெள்ளவத்தையில் அண்ணன் வாடகைக்கு எடுத்த சகலவசதிகளோடு அமைந்த வீட்டில் தங்கி, களையாறி... யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட இருந்த வேளையில், செல்வியைத் தடுக்கிறான் அண்ணன். அவன் 'சொப்பிங்' போக விரும்புவதை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் வாங்கிக் கொடுத்து, கைச்செலவுக்கென இரண்டு லட்சரூபா பணத்தையும் அண்ணன் கையினில் வழங்கி, உயர்தர உணவகங்களில் சாப்பிட்டது மட்டுமன்றி, அண்ணனின் மகனுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றும் வாங்கிக் கொடுக்கிறாள் செல்வி. அதன்பின்... வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கையில், தனது மகள் சகானாவுக்கு மாப்பிளை பார்த்திருப்பதாகவும், வாறகிழமை தட்டு மாற்றப்போவதாகவும் அண்ணன் கூறியபோது, செல்வி உள்ளூர மகிழ்வடைந்து போகிறாள். ஆனால், அந்த மகிழ்வு சகானாவைப் பெண்பார்க்க வந்த அன்று, அடியொட்டச் சிதைந்து போகிறது செல்விக்கு.

செல்வி கணவனை இழந்தவள். அவள் விதைவைக்குரிய வெள்ளை உடையோடும், மனவளர்ச்சி குன்றிய மகனோடு நிற்பதும் அண்ணனுக்குப் பிடிக்கவில்லை. அண்ணன் அவளது உடை குறித்து விமர்சிப்பதோடு, மன வளர்ச்சி குன்றிய மகனை தனியொரு அறைக்குள் தனிமைப்படுத்தவும் செய்கிறான்.

பெண்பார்க்க வந்தவர்கள் பெண்ணைப் பார்த்து எல்லாம் திருப்தி ஆனபின், சீதனபேரம் அங்கு பேசப்படுகிறது. " எங்கட மகன் இஞ்சினியர். மற்றவர்கள்மாதிரிக் கனக்கக் கேட்கவில்லை. ஐம்பது லட்சம் வங்கியில் 'கலியாணத்துக்குமுன்' போடுவியள் தானே?". மாப்பிளையின் அம்மா கேட்கிறாள். அதற்குக் கண்ணன் " அது ஒரு பிரச்சினையுமில்லை. தங்கச்சி தன் மருமகளுக்கு, தானே செய்ய வேணுமென்று ஒற்றைக்காலில் நிற்கிறாள்..." என்று கூறுகிறான். செல்வி, தான் சொல்லாத ஒருவிடயத்தை... செய்ய நினைக்காத ஒரு செயலை அவள் சொன்னதாகக் கூறி, தன் மகளுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனப்பணத்தை தங்கையின் தலையில் சுமத்திவிடும் அண்ணனின் சுயநலத்தையும், செல்வியின் 'அப்பிராணி' மனநிலையையும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது வாசகனுக்கு. தங்கையின் இரக்க சுபாவமும், சகோதர மற்றும் நல்லாயிருக்க வேண்டும்... என்ற மனப்பாங்கும் அண்ணனின் சுய தேவைகளுக்கு முன்பாக அடிபட்டுப் போய்விடுகின்றன.

செல்வி தனது வீட்டிற்கு வரும்போது இரவு 12 மணியாகின்றது. வந்தவள் நேரே தனது தந்தையின் அறைக்குள் செல்கிறாள். வீட்டின் பின்பகுதியில் அமைந்த அறையானது ஊத்தையும் தூசுமாக இருக்கிறது. அறையின் நிலைபரத்தைப் பார்த்த செல்விக்கு, அண்ணனின் மன அழுக்கினைப் புரிந்து கொள்ள முடிகிறது. அப்பா இருக்கும் காணியை தனது பெயருக்கு மாற்றும்படி வற்புறுத்துவதும், வருத்தக்கார அப்பாவையும் பராமரித்துக் கொண்டு முற்றத்தில் நின்ற வேப்பமரத்தின் கஞ்சல் குப்பைகளையும் கூட்ட முடியாத நிலையில், அதைத் தறித்து விட்டதாக அண்ணிக்காரி கூறுவதும், செல்வியின் மகன் மனவளர்ச்சி குன்றி நிற்பதனால், வெளிநாட்டில் அப்படியானவர்களுக்குக் காசு குடுப்பினம்தானே... என்று அண்ணன் கேட்பதுவும் புலம் பெயர்ந்தோரின் ஒட்டுமொத்த வலிகளையும் அறியாத சொகுசு ஜீவியத்தின் வெளிப்பாடே எனக் கொள்ளலாம்.

தனது உழைப்பும் பணமும் ஒரு உதவாக்கரையிடம் வந்து சேர்ந்து விட்டதை செல்வி உணர்ந்து கொள்கிறாள். அப்பாவைப் பராமரிக்க வரும் சாந்தி எனும் பெண், ஒருவிடயத்தை அவளிடம் கூறியபோது, அவளுக்கு அது ஒரு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. சாந்தி, தான் மாதத்தில் ஒருநாள்தான் வருவதாகக் கூறியபோது, மாதாமாதம் அப்பாவின் செலவுக்கென அனுப்பிய முப்பதினாயிரம் ரூபா பணத்திற்கு என்ன நடந்தது? என்பதை செல்வியால் ஜீரணிக்க முடியாமல் இருந்தது. சுயநலத்தோடு கூடிய சுரண்டல்தனங்கள் பற்றி கதாசிரியை வாசகனுக்கு நன்கு புரிய வைக்கிறார்.

அநேகமாக புலம் பெயர் தேசங்களுக்குப் பிழைப்புக்காகப் போனவர்களின் வீடுகளில் நிகழுகின்ற சம்பவங்களில் ஒன்றாக கதையில் காட்சிப்படுத்தப்படுவது, கதாசிரியையின் அறம்சார்ந்த வெளிப்பாடே ஆகும். வெளி உலகிற்கு " எங்கட பிள்ளையள் வெளிநாடு..." என்று தம் பட்டம் அடிப்பவர்களது வாழ்க்கையின் சூச்சுமத்துள் இவ்வாறான வெளித்தெரியாமல் உறைந்து கிடக்கும் ஒரு உண்மையை தனது எழுத்துக்கள் மூலம் உடைத்து பொதுவெளியில் சிதற விட்டிருக்கிறார் நக்கீரன் மகள். இக்கதையின்நாயகி எங்கோ இருக்கும் ஒன்றல்ல. புலம்பெயர்தேசங்களில் கண்களுக்குத் தெரியாமல் உருகிக் கொண்டிக்கும் மெழுகுவர்த்திகள்.

வறுமையின் நிழலில் வாழும் போது பாணும் பழஞ்சோறும் உண்பவர்கள்... புலம்பெயர்வாளர்களின் பணம் கிடைத்ததும், அந்தப் பாணையும் பழஞ்சோற்றையும் மறந்து விடுகிறார்கள். இதற்கு ஓர் உதாரணமாக, செல்வியின் அண்ணி பக்கத்து நகருக்குச் சென்றுவரும்

( 25 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலியே பயிரை மேய்ந்தது

- ரஜிதா அரிச்சந்திரன்



ரஜிதா அரிச்சந்திரன் ஒரு கவிஞை. சிறுகதை உலகத்தில் புகுந்து பல கதைகள் வாசகர்களுக்குத் தந்துள்ளார். பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளை துணிவோடு எடுத்து மக்கள் முன் சமர்ப்பிப்பவர்.

மூங்கிலாறுக் கிராமத்தில் பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் அடர்ந்த காட்டை துப்புரவு பண்ணி சிறுகுடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். அதில் சில குடும்பங்கள் கூட்டுக்குடும்பங்களாகவும் இருந்தன. அவ்வாறான குடும்பங்களில் ஒன்றுதான் எழிலுடைய குடும்பமும் எழில், எழிலின் தாய் தந்தை,அக்கா அக்காவின் கணவர் பிள்ளை எல்லோரும் சேர்ந்து இருந்தார்கள். எழிலின் தந்தையும் அக்காவின் கணவரும் கூலிவேலைக்குச் செல்வார்கள். அக்காவும் அம்மாவும்



காட்டை வெட்டி விற்கு எடுத்துவர செல்வார்கள். பதின்மூன்று வயதே நிரம்பிய எழில் பாடசாலைக்கல்வியை மூங்கிலாறு பாடசாலையில் கற்று வந்தாள். எனினும் குடும்ப வறுமை காரணமாக அப்பப்பத்தான் பாடசாலை செல்வாள். இவளுக்கு படிப்பு மீது அதிகப்படியான ஆசை எல்லோரும் வெளியில் சென்றால் குழந்தையை யார் பார்ப்பது? என்பதால் இவளை அடிக்கடி பாடசாலைக்கும் செல்ல விடாமல் தடுத்து விடுவார்கள். இவ்வாறாக அவளின் படிப்பும் வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையும் என்று சென்று கொண்டிருந்தது. அக்காவின் கணவரும் தந்தையும் குடித்து விட்டு வந்து ரகளை பண்ணுவார்கள். குழந்தையும் அக்காவும் அம்மாவும் அழுதிட்டே இருப்பார்கள் . அக்காவிற்கு அடி விழும் இதெல்லாவற்றையும் கண்டு எழில் கவலைப்படுவாள். ஒருநாள் எல்லோரும் வேலைக்குச் சென்றுவிட்டார்கள். எழிலும் குழந்தையும் மட்டுமே வீட்டில் இருந்தார்கள். அந்த நேரத்தில் போதையில் வீட்டுக்கு வந்த அக்காவின் கணவர் "எழில் இங்கே வா"

"ஓம் அத்தான் வாறேன்" என்றவளை கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாயேன் என்றதும் தண்ணீரை கொண்டுவந்து கொடுத்தவளை "அக்காவும் அம்மாவும் வெளியில் போயிட்டினமா? "ஓம் அவை காட்டுக்கு போயிட்டினம் "என்று கூறவும் அவனின் சபலம் பாம்பைப்போல் எட்டிப்பார்த்தது எழில் வா என இழுத்து அவளிடம் தப்பாக நடக்க முயன்றான். "அத்தான் வேண்டாம் இதெல்லாம் தப்பு என கத்திக்கதறியும்" அவன் விடவே இல்லை . அவனின் இரும்புப் பிடியில் நசுக்கிப் போனாள். "இதையாரிடமும் சொன்னால் உன் அக்காவையும் குழந்தையையும் கொன்று போடுவேன்" என மிரட்டினான் பயந்த அவளும் இதனை யாரிடமும் சொல்லவில்லை.

இந்தத் துன்பம் அவளுக்கு தொடர்கதையாய்ப் போனது. திடீரென்று ஒருநாள் எழில் விடாது வாந்தி எடுத்தாள். அவளை வைத்திய சாலை கூட்டிச்சென்று. தாய்க்கு தலையில் இடிவிழுந்து போலானது வைத்தியர் "அம்மா உங்கள் மகள் மூன்று மாதம் கர்ப்பமாக இருக்கிறார். உங்களுக்கு தெரியுமா இதற்கு யார் காரணம்?" என ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டுத் துளைத்து எடுத்தார். "எதுவும் தெரியாது நான் வீட்டிற்கு கூட்டிப் போய் விசாரிக்கின்றேன்" என்றதும் "நீங்கள் போக இயலாது சிறுவர் பிரிவிற்கு அழைத்துள்ளேன் அவர்கள் வந்து விசாரிக்கும் வரை வெளியில இருங்கோ" . என்றதும் சரி எனத் தலையாட்டி விட்டு வைத்திய சாலையில் இருந்து தப்பி ஓடிவந்து வீட்டிற்கு வந்ததும் "இதுக்கு யாருடி காரணம் எவன் கூடப் போனாய் குழந்தை என்று தானே இருந்தேன் அதுக்கிடையில் என்னடி அவசரம்" என தலையில் அடித்து க்கத்தி எழிலுக்கும் அடித்தாள் எனினும் அவள் ஒன்றும் சொல்லவில்லை. "எவ்வளவு அடித்தாலும் என்ன ஒரு விசமம் செய்யிறதையும் செய்து போட்டு கலலுமாதிரி இருக்கிறாளே என ஒப்பாரிவைத்தார் .வெளியில் இருந்து வந்த அக்கா "ஏன் அம்மா அவளை அடிக்கிறீங்கள் என்ன ஆச்சு ?" அதை "ஏனடி கேக்கிறாய் ? குடி முழுகிப்போச்சு என்று கத்தும் அம்மா என்ன ஆச்சு என்று சொன்னாதானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும் என்றவளுக்கு முழுவிடயத்தையும் சொன்னதும் கேட்ட அவளுக்கு உலகமே அவளைச் சுற்றுவது போல் இருந்து மயங்கிச்சரிந்தெழுந்து "எழில் ,என்னடி நடந்து உன்னை இப்படிப் பண்ணியது யார் ?" என்று சொல்லென பலமுறைகேட்டும் பதில் இல்லை. தாயும் அவளும் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கையில் நாலுகாலில் நடந்து வந்த தந்தையை கண்டதும் பயத்தில் நடுங்கினர். ஒருவாறாய் தைரியத்தை வரவழைத்து அருகில் சென்று தாய் என்னங்க இந்தப்பிள்ளை இப்புடிப்பண்ணீட்டாளே ! எந்தப் பிள்ளை ?என்ன பண்ணினது? என் வெறியில் உளறியவனுக்கு எழில்,ஆ எழில் என்ன பண்ணினாள் ? என்றதும் முழுவதையும் கேட்ட அவன் "என்னனடி சொல்லுறாய் நீ ஒழுங்கா இருந்தாதானே அதுகள் ஒழுங்கா இருக்கும் ஆட்டக்காரி நீ செத்தா அப்புடித்தானடி இருக்கும் " என்றே கல்தினான் இரவு முழுக்க ரகளை அப்படியே எல்லோரும் நித்திரைக்குச் சென்றதும் பூனைபோலே எழில் அருகில் வந்த பாவி வெளியில் கூட்டிவந்து "உன்பிள்ளைக்கு நான் தான் அப்பா என்று வெளியில் சொன்னால் தெரியும் தானே உன் அக்காவும் அக்கா குழந்தையும் !!!??"என மிரட்டி கர்ப்பிணி என்றும் பாராது பாலியல் வன்கொடுமை செய்தான் அழுது அழுது களைத்தே நித்திரையாகிவிட்டாள். காலை எழுந்ததும் மறுபடியும் சண்டை ஆரம்பித்து ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினார்களே ஒழிய எந்தத் தீர்வுக்கும் வரவில்லை. திடீரென்று எழுந்து "இந்த குடும்பத்து மருமகனாக இருப்பதால் ஒன்று சொல்லுறன் இந்த கருவை அழித்து விடுவோம்" என்றதுமே எழிலனின் தாய் "இந்த எருமை இதற்கு காரணம் யாரென்று சொன்னால் அவனை தொலைத்து விடுவேன்" என்று கத்தும் இவனுக்கு பக்பக் என்றிருந்தது உடனே "சரி விடுங்க மாமி நடந்தது நடந்து போச்சுது என்ன செய்யிறது குடும்ப மானம் முக்கியம் என்று அவன் பேசப்பேச குழம்பிப்போய் இருந்த இவர்களும் சம்மதித்தனர். திடீரென்று வீட்டு வாசலில ஒரு வான் வந்து நின்றதும் பயந்து போனார்கள்.

"கமலா (எழிலின் அக்கா) நீ போய்ப் பார் வந்து ஆரென்று " தாய் கூறியதும் சென்று பார்த்த கமலாவிற்கு "இது எழிலின் வீடா?" "ஆம் நீங்கள் என் இழுத்தவளுக்கு? " தொடர்ச்சியாக பத்து நாட்கள் எழிலில் பாடசாலைக்கு வரவில்லை அதுதான் நன்னடத்தை உத்தியோகத்தரும் நாங்களும் வந்திருக்கிறோம். என்ன பிரச்சினை என சொல்லுங்கோ?" என்றதும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது அம்மா எழிலுக்கு எழிலுக்கு என பிதற்றியவளை எழிலுக்கு என்ன நடந்து என் உறுக்கியதும் முகம் எல்லாம் வியர்த்து கைநடுங்கி உடலெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநடுங்கி இருந்த அவள் பயத்தில் காய்ச்சல் என்றவளை நன்னடத்தை உத்தியோகத்தர் அப்ப கொவிட் சோதனை செய்தீர்களா ?? இல்லம்மா அது மாறிட்டுது என்றதும் அப்ப ஏன். பாடசாலைக்கு அனுப்பவில்லை? உங்க வீட்டில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? "கொஞ்சம் கஸ்ரம் அதான் அனுப்பவில்லை நாங்கள் ஆறுபேர் இருக்கிறம் நாளைக்கு அனுப்பி வைக்கிறோம் கூலிவேலை தான் செய்றோம் என்றதும் சரி சரி நாளையிலிருந்து ஒழுங்கா பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள் இல்லாட்டா உங்களை கைது செய்யவேண்டி வரும்" என கூறிச் சென்றனர். அவர்கள் சென்ற வழியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள். அவர்கள் சென்றதும் உள்ளே வந்து "நாங்கள் மாட்டப்போறோம் . ஏதும் செய்ய வேண்டும் பிரதேச செயலக உத்தியோகத்தர் கூறும் பாடசாலை உத்தியோகத்தர் கூறும் வந்துட்டாங்கள் அவங்கள் சந்தேகப்படுறாங்கள் போலே இனி இவளை பள்ளிக்கு அனுப்பாமல் இருந்தால் என்னைத்தானாம் கைது செய்வாங்களாம் இந்த கருவை கலைக்கிறது தான் ஒரே வழி " என்றே புலம்பித்தீர்த்த அவளருகே வந்த அவள் கணவன் "பொறு ரவுணுக்குள்ள ஒரு பொம்பிளை இருக்காம் கூட்டி வந்து கலைத்துவிடுமா?" என்றதும் செய்வதறியாமல் தவித்த அனைவரும் ஆமோதித்தனர். அவனும் ரவுணுக்கு வந்து அந்த பொம்பளையுடன் பேசி கூட்டிச்சென்றான் அவள் எழிலுக்கு ஏதேதோ செய்தாள் வலியால் தீயில் விழுந்த புழுப்போல் துடித்த எழில் மயங்கி விட்டாள் வந்தவளோ காசு வாங்கிச்சென்றுவிட்டாள் . இரத்தப்பெருக்கு நிற்காது வாழ வேண்டிய குழந்தை இறந்தே விட்டது. இறந்தவள் உடலை இரவோடிரவாக யாருக்கும் தெரியாமல் காட்டுக்குள் புதைத்து விட்டார்கள் அவளின் குடும்பத்தினரே!. மொட்டொன்று பிடுங்கி கசக்கி வீசப்பட்டதே???


---

(22 ஆம் பக்கத் தொடர்)

பஸ்சாரதியிடம்பணம்கொடுத்து - "அடுத்த 'ரிப்' வரேக்கை 5 பிரியாணியும் 3 கொத்துரொட்டிப் பார்சலும் வாங்கி வாங்கோ..." என்று கூறுவதில் இருந்து வாசகனால் புரிந்து கொள்ள முடி யும். இக்கதையின் ஆசிரியை கூறியிருப்பது போன்று " பல வீடுகளில் வெளிநாட்டுப் பணங்கள் அடுக்களைக்கு விடுமுறையைக் கொடுத்தன..." ஆம்! இது மறுதலிக்க முடியாத உண்மை. செல்வி ஒரு பரிதாபத்துக்குரிய பாத்திரம். அதேவேளை, இச் செல்வியினூடாக அன்பு, பாசம், இரக்கம், விட்டுக்கொடுப்பு போன்ற எந்தவொரு உணர்விலும், கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்பதை ஆசிரியை தெளிவாக வலி யுறுத்தியிருப்பதும் சிந்தனைக் குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிணற்றடி..



அந்த மூலையில் இருந்த கிணற்றைக் கண்டதுமே, எல்லோரும் மூக்கைப் பிடிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். அந்த ஒழுங்கை தாண்டியதுமே அந்தக் கிணறு தன் இருப்பைச் சொல்லி நிற்கும். ஒரு காலத்தில் இந்த ஊரின் ஒரேயொரு நல்ல தண்ணீர்க்கிணறு இது தான். எவ்வளவோ தூரத்தில் இருந்து வந்தவர்களின் தாகம் தீர்த்த அமுத சுரபி, மாரிகாலத்தில் தொப்பிக் கட்டோடு தண்ணீர் நிற்கும். சனம் குடத்தை வைத்தே தண்ணி அள்ளிக் கொண்டு போவினம்.

கோடை காலத்தில் தண்ணீர் ஊற ஊற ஒற்றி அள்ளி வீட்டில் படியவைத்தே குடிப்பார்கள், இப்படி அந்த மூலைக் கிணறென்றால் குடிதண்ணிக் கிணறு என்று நினைத்த அந்தக் கிணறைத் தான் இப்போது யாரும் தேடுவதில்லை

இந்தக் கிராமத்தில் சமூகக் கொடுமைகள் அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது. எல்லோரும் அந்தக் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. யார் அள்ளக் கூடாது என்று சொன்னார்களோ, அவர்கள் யாராவது வரும் வரைக்கும் கிணற்றடியில் காவல் நிற்க வேண்டுமாம். அன்றைக்கும் வழக்கம் போல யாரும் வராததால், காத்து நின்ற மனிசி

● கர்ணன் சின்னத்தம்பி



கரவெட்டியைச் சேர்ந்த இவர் கவிஞராக இருந்தபோதும் சிறுகதைத் துறையிலும் தன் முத்திரையைப் பதித்து வருகிறார். இவர் பல சிறுகதைகள் மஞ்சரியில் எழுதி உள்ளார். விரைவில் இவரின் சிறுகதைத் தொகுப்பு வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய வாளியால அள்ளிப் போட்டுது என்று, அந்தக் கிணற்றுக்குள்ள கஞ்சல் குப்பை, இளநீர்க்கோம்பை எல்லாம் போட்டு ஒருதருக்கும் பயனில்லாமல் போய்ச்சுடா மேனை என்று பொன்னப்பு அடிக்கடி அந்தக் கிணற்றைத் தாண்டும் போது சொல்லுவார்,

இப்ப சனமெல்லாம் நல்ல தண்ணீருக்காக எத்தனையோ தூரம் போகுதுகள். " வானத்தில் இருந்து பெய்யும் போது எல்லோருக்கும் பொதுவாக பெய்யிற மழை நீர், நிலத்தில விழுந்ததும் என்ன பாடு படுகிறது..." என்று அடிக்கடி அலுத்துக் கொள்வார். " இந்தச் சனம் எப்பதான் திருந்துமோ தெரியாது, கோயில் இரண்டு, கிணறுகள் வேறை வேறை, குளங்கள் வேறை வேறை. பொன்னப்புவின் வயதிற்கும் அனுபவத்திற்கும் இப்படி எத்தனையைப் பார்த்திருப்பார். நாங்கள் ஏதும் கூடக் குறையக் கேட்டால்

"அட மேனை ஒரு பழமொழி சொல்லுவாங்கள் தெரியுமோ, தானும் தின்னான், தின்னவும் விட மாட்டான்.." என்று சிரித்துக் கொண்டே நாலு முழ வேட்டியை பக்கம் மாறிக் கட்டுவார்

இந்தக் கிணற்றடியைத்தான் அக்காத்தை தனது பகல் நேர இருப்பிடமாக்கிக் கொண்டாள். அந்தக் கிணற்றடிப் பக்கம் யாரும் பெரிதாகப் போகாதபடியால் அக்காத்தைக்கு அது பாதுகாப்பாக இருந்தது. அக்காத்தை ஒரு வைக்கல் கட்டு எப்போதும் வைத்திருப் பாள். சேலையும் சட்டையும் போட்டிருப்பாள். அந்தச் சேலை கூட அங்கங்கங்கே கிளிஞ்சுதான் இருக்கும். ஆனாலும் அவளோடு யாரும் பெரிதாக சண்டையோ, தொல்லையோ கொடுக்கப் போவதில்லை, அவள் தெருவால் யாரும் போனால் பலமாகத் தேவாரம் பாடிப் பிரசங்கம் செய்வது போல சத்தம் போட்டுக் கொண்டிருப்பாள். அதனால் யாருமே பெரிதாக கிட்டப் போவதில்லை. யாரும் இல்லாத நேரத்தில் தனக்குள் ஏதேதோ சொல்லி அழுது கொண்டிருப்பாள். எல்லோரும் அக்காத்தையைப் பைத்தியம் என்று சொல்கிறார்கள். பைத்தியத்தால் எப்படி தேவாரங்களை ஒழுங்காக பாடி பொழிப்புரை சொல்ல முடியும். அக்காத்தை அந்தப் பாழ் கிணற்றுக்கும் பக்கத்தில இருந்த வேலியில் இருக்கும் முசுட்டைக் கொடி, பிரண்டைக் கொடிக்கெல்லாம் பாடம் எடுப்பாள்

அக்காத்தை, அந்த ஊரின் ஒரு ஓரமாக இருந்த ஒரு சின்னக் கிராமத்தைச் சேர்ந்தவள். நல்ல வடிவும், கெட்டிக்காரியுமாம். அந்தக் கிராமத்தில இருந்து பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் போய்ப்படித்து, பல்கலைக் கழகம் சென்று, பட்டம் பெற்ற ஆசிரியையாம். அருகில இருந்த பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக கடமையாற்றி வந்தாள். அந்தப் பாடசாலையில் தான் , அந்த வாத்தியாருக்கும் அவளுக்கும் இடையில் காதல் மலர்கிறது. அக்காத்தையும் நல்ல அழகானதால், வாத்தியாருக்கும் நல்ல விருப்பமாக இருந்திருக்கிறது. காதலை கிராமங்களில் பெரிதாக யாரும் அங்கீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிப்பதில்லை, அதை விட இருவரும் வேறு வேறு சமூகத்தவர். அதனால் யாரும் இல்லாத நேரங்களிலேதான் சந்தித்து கதைத்து வந்தனர்.

பெரும்பாலும் , அக்காத்தையும் வாத்தியாரும் விடுமுறை தினங்களில் பக்கத்தில இருந்த தக்காளிச் செடிகளுக் கிடையில் ஒளிந்திருந்து கதைத்து வந்தனர். அப்படிக் கதைத்து வரும் நாளில் ஒரு நாள் , அக்காத்தையும் தன்னைப் பறிகொடுத்து விட்டாள். அதன்பிறகு வாத்தியார் அக்காத்தையைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்திருக்கிறார். ஆனால் அவர்களின் சந்திப்பை அக்காத் தையின் உடல் வெளியே சொல்லத் தொடங்கி விட்டது. வாத்தியார் காசைக் கொடுத்துச் சமாளிக்கப் பார்த்தார், ஆனால் அக்காத்தை விடவில்லை, அவள் பல சிரமங்களை எதிர்கொண் டாள். பள்ளியில் தனக்குத் தானே அதிகமாகப் பேசத் தொடங்கினாள். எந்த மாணவர்ககளும் அக்காத்தையின் வகுப்பிற்கு போகவே பயப்பட்டாரகள். அதனால் நாளடை வில் அக்காத்தையின் வேலையும் போனது.

அக்காத்தையைப் பார்த்து, ஊர்ச் சனம் பயப்பட்டது. அக்காத்தை சொல்லாமல் கொள்ளமலே வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள். பகல் நேரமெல்லாம் அந்தக் கிணற்றடி, இரவு நேரத்தில் ஆளரவமற்ற அந்த கோயிலில் படுத்துறங்குவாள். எங்கே சாப்பிடுகிறாள் என்று யாருக்கும் தெரியாது. ஒரு வேளை கோயிலில் சாப் பிடுகிறாளா யாருக்கும் தெரியவில்லை

அந்தக் கிணற்றடியில் அக்காத் தையின் பிரசங்கம் கேட்டுக் கொண்டே இருக்கும், காலையில தோட்டம் போறவை, குளிக்கப் போறவை எல்லாம் அக்காத்தையின் குரலைக் கேட்காமல் போகமுடியாது. கிணற்றுக்குப் பக் கத்தில் இருந்த பற்றையில படுத்துக் கொண்டே அந்த வாத்தியாரை மெதுவாகப் பேசிக் கொண்டே இருப் பாள். அவளுக்குப் பக்கத்தில் யாரும் போனால் பெரிதாக சத்தம் போட்டு தேவாரம் படிப்பாள். அக்காத்தை உண்மையில் பைத்தியமா இல்லை இது அவளின் பாதுகாப்புக்காக அவள் தேடிக் கொண்டதா யாருக்கும் தெரியவில்லை.

இப்படியே காலங்கள் ஓட, இராணுவ முற்றுகைக்குப் பயந்து சனம் எல்லாம் ஊரை விட்டு ஓட, கொஞ்ச நாளின் பின் அமைதியாக வந்து பார்த்த போது, அக்காத்தை தான் வைத்திருந்த வைக்கல் கற்றையை இறுகப் பிடித்தபடி படுத்துக் கிடக்கிறாள். அக்காத்தையின் பிரசங்கம் இனி கேட்காது. அக்காத்தை ஓய்வெடுத்து விட்டாள்.

அந்த ஊரே அமைதியாகிப் போய் விட்டது. எல்லாமே அமைதியாகி சூனியமாகிவிட்டது..

**சிறுகதை**

சிறுகதையில் எழுத்து நடை மிகமிக அவசியமாகிறது. படிப்பவர்களின் மனதைக் கவரக் கூடியதாக எழுத்து நடை மிக எளிய தமிழில் அமைதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை

மு. தயாளன்



அத்தியாயம் 16

அன்று கூட்டம் முடிந்து வீடு போகும்போது கபிலன் மனம் நிறைந்து சந்தோசமாகவே சென்றான். ஆனால் வீட்டுக்குச் சென்றதும் அங்கு அவனுக்காகக் காத்திருந்த நபரைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டான்.

அங்கு இருந்தவர் அவனுடைய மாணவி அருந்ததியின் தகப்பன். இவர் ஏன் இங்கு வந்திருக்கிறார் எதுவுமே அவனுக்குப் புரியவில்லை.

அருந்ததி அவனது தனிப்பட்ட மாணவி. படிப்பில் படு சுட்டி. அவளது வீட்டுக்குச் சென்று கணிதபாடம் சொல்லிக் கொடுப்பான். அவளும் ஆர்வமாகப் படிக்கும் ஒரு மாணவி. வாரத்தில் மூன்று தடவை அவர்கள் வீட்டிற்குச் சென்று படிப்பிப்பான். அவர்கள் வீடு வெள்ளவத்தையில் உள்ள றொக்சித் தியேட்டருக்கு அருகாமையில் உள்ள வீதியில் உள்ளது.

அவன் படிப்பித்துவிட்டு வரும் போது அவள் வாசலில் நின்று அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பாள். கபிலன் அதனை என்றைக்குமே வித்தியாசமாக எடுத்ததில்லை.

வகுப்புகள் முடிந்து அவர்கள் தங்கள் ஊருக்குச் சென்ற பின்பு அவளிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதம்கூட சாதாரணமாகவே இருந்தது. அதனை அவன் நண்பன் சுந்தரேசனும் வாசித்திருந்தான். ஆனால் சுந்தரேசன் அந்தக் கடிதம் ஏதோ செய்தியைச் சொல்வதுபோல் உள்ளது என்று கூறினான். கபிலன் அதனை மறுத்து அந்தப் பிள்ளை மிக நல்ல பிள்ளை என்று கூறி அந்த விடயத்தையே இருவரும் மறந்து விட்டார்கள். அதற்குப் பின்பு எந்தக் கடிதமும் வரவில்லை. கபிலனும் தன் வேலைகளில் மூழ்கி விட்டான்.

இன்று அருந்ததியின் அப்பா வந்திருக்கிறார். என்னவாக இருக்கும் என்று கபிலன் குழம்பிப்போய் இருந்தான். வந்தவரை உள்ளே அழைத்துச் சென்று இருக்கும்படி கூறிவிட்டு

" என்ன திடீரென்று வந்திருக்கிறியள்?"

என்று கபிலன் கேட்டான். அவனுடைய கேள்விக்குப் பதில் அளிக்காமல் அவனைப்பற்றி விசாரித்தார். அவனுடைய அப்பாவைப்பற்றியும் விசாரித்தார். இப்படி சுற்றிசுற்றி அவனுடைய வேலை போன்றவற்றின் விவரங்களையே கேட்டுக் கொண்டிருந்தார். கபிலனும் அவர் கேட்ட விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தவன் திடீரென்று முழித்து " நீங்கள் ஏன் இதையெல்லாம் விசாரிக்கிறியள்?" என்று கேட்டான்.

" மாஸ்டர் எனக்கு எல்லாம் தெரியும். மகள் என்னட்டைச் சொல்லியிட்டா" என்றார் அவர்.

இப்போ கபிலன் கொஞ்சம் உஷாரானான்.

" எனக்கு விளங்கேல்லை. அருந்ததி என்ன சொன்னவ?" என்று கபிலன் கேட்டான்.

" மாஸ்டர் ஏன் பதட்டப்படுறியள்.. எங்களுக்கும் சம்மதம்தான்" என்று அவர் கூற, விடயம் பிழையான பாதையில் செல்வதை கபிலன் புரிந்து கொண்டான். பின்பு அவரே தொடர்ந்தார்

"மாஸ்டர் மகளுக்கும் உங்களுக்கும் இடையில் காதல் இருக்கெண்டு மகள் சொன்னவ. அதுதான் அதைப்பற்றிக் கதைச்சுச் செல்லலாம்.. என்று வந்தனான்" என்று அவர் கூறி முடிக்க கபிலனுக்கு வேர்க்கத் தொடங்கி விட்டது. ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளித்துக் கொண்டு

"நீங்கள் பெரியவர் நான் சொல்லிறதைக் கவனமாகக் கேளுங்கோ. "நான் ஒரு ஆசிரியர். உங்கடை மகள் என்ரை மாணவி. இதுக்கு அப்பாலை எந்த உறவும் இல்லை. ஆசிரியத் தொழிலை நான் நிரம்ப நேசிப்பவன். அருந்ததி ஏதோ தவறாய் யோசிச்சிட்டா. நான் அவவின்ரை கெட்டித் தனத்திற்காக கூட வகுப்பெடுத்து படிப்பிச்சதை வைச்சு அவ தவறாய் நினைச்சிட்டா. குறை நினைக்காதையுங்கோ.. நான் ஆசிரியத் தொழிலுக்கு துரோகம் செய்ய மாட்டன். ஆசிரியருக்கும் மாணவிக்கும் இடையிலுள்ள உறவு குரு - சிஸ்யை என்ற உறவுதான்." என்று கூறி முடித்தான் கபிலன்.

அவன் சொல்வதை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த அவரின் கண்கள் கலங்கியிருந்தன. பெண்ணைப் பெற்ற அப்பாக்களுக்கு எப்போதும் இப்படியான சங்கடங்கள் வருவதுதான்.

அவர் கபிலனுக்கு எதுவும் கூறாமல் அமைதியாக எழுந்து வெளியே போகத் தொடங்கினார். கபிலன் அங்கிள்.. அங்கிள் என்று கூப்பிட்டுப் பார்த்தான். அவர் திரும்பிப் பார்க்கவேயில்லை.

அப்போது சுந்தரேசன் அவரையும் பார்த்து கபிலனையும் பார்த்தபடி வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

" என்ன மச்சான் ஆரது?" என்று சுந்தரேசன் கேட்க

"உள்ளை வா சொல்லிறன்" என்று அவனை இழுத்துக் கொண்டு உள்ளே போனான் கபிலன்.

"அது அந்தப் பெட்டையின்ரை அப்பா மச்சான்" என்றான் கபிலன்.

"எந்தப் பெட்டை?" சுந்தரேசன் கேட்டான்.

" வேறை யார் மச்சான் ..முந்தி ஒருக்கால் கடிதம் எழுத நீ சந்தேகப்பட்டியே.. அந்தப் பெட்டையின்ரை அப்பாதான்"

என்றான் கபிலன்

"இப்ப ஏன் வந்தவர்?" சுந்தரேசன் கேட்டான்.

" அந்தப் பெட்டை என்னைத் தான் காதலிக்கிறதாயும் நானும் அவளைக் காதலிப்பதாயும் சொல்லி அனுப்பியிருக்குது" என்று கபிலன் சொல்ல,

" அப்ப இவர் என்ன கலியாணம் பேசியே வந்திருக்கிறார்?" என்று சுந்தரேசன் கேட்டான்.

"ஓம் மச்சான். நான் ஆறுதலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் புரியும்படி விளக்கிச் சொல்ல அவர் புரிஞ்சிட்டார் எண்டுதான் நினைக்கிறன். பேசாமல் எழும்பிப் போகத் தொடங்கியிட்டார்." என்றான் கபிலன்.

" நான் அண்டைக்கே சொன்னனான். நீதான் அந்தப் பிள்ளை அப்பிடியானதில்லை அது இது என்று கனக்கச் சொன்னாய்" என்று சுந்தரேசன் சொன்னான்.

"இல்லை மச்சான். ஆனால் இதை நான் தவறென்று நினைக்க யில்லை. நாங்கள் இள வயதிலை உள்ள ஆசிரியர்கள் கொஞ்சம் நெருங்கிப் படிப் பிக்கேக்கை இப்படியான எண்ணங்கள் வாறது சகஜம்தான். அதை புத்தி சொல்லித் திருத்திவிட்டால் அவை சரியாகி விடுவினம்" என்று கபிலன் சொன்னான்.

" உனக்கேதோ பொம்பிளை ராசி மச்சான். நீ கோவிக்காட்டால் ஒண்டு சொல்லட்டே. நீ எங்கடை வீட்டை ஒரு நாலைஞ்சு நாள்வந்து தங்கச்சிக்குப் படிப்பிச்சனீ எல்லே. அந்த நாலைஞ்சு நாளைக்கை என்ரை தங்கச்சிக்கு உன்னிலை காதல் வந்திட்டுது" என்று சுந்தரேசன்சொல்லதிடுக்கிட்டுப்போன கபிலன் " பிறகு.." என்றான்.

" எனக்கு உன்னைப்பற்றித் தெரியும்தானே. தங்கச்சியின்ரை நடைமுறைகளிலிலை இருந்துதான் கண்டு பிடிச்சன். ஒரு நாள் அவளை நேரேயே கேட்டிட்டன். அவள் கொஞ்சமும் யோசிக்காமல் ஓமெண்டிட்டாள். நான் கோபப்படாமல் அவளுக்குச் சில விசயங்களைப் புரிய வைச்சு மனதை மாற்றினன்" என்றான் சுந்தரேசன்.

" இஞ்சை பாரடா.. எனக்குத் தெரியாமல் எத்தனை விசயம் நடந்திருக்கு. பயமாய்க் கிடக்குது" என்றான் கபிலன்.


"ஓம் மச்சான் கவனமாயிரு. இப்ப நீ போயிருக்கிறதும் ஒரு பெண் கள் பாடசாலை. சரியான கவனமாயிருக்கவேணும்." என்றான் சுந்தரேசன். அதனை ஆமோதித்த கபிலன் இன்று பாடசாலையில் நடந்த விடயங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் சுந்தரேசனுக்குக் கூறினான். அத்தோடு சாந்தா ரீச்சர் கடைசியாயச் சொன்னதையும் கூறிவிட்டு பள்ளிக்கூடத்தில் ரீச்சர்மார் தனக்கும் வசந்திக்கும் காதல் என்று கதைக்கினம் என்பதையும் கூறி வைத்தான்.

( இன்னும் வரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் நின்றறுக்கும்!



கனகம் வைத்தியசாலை வாசலில் உறைந்து போய் இருந்தாள். அவள் உடலில் எந்த அசைவும் இல்லை. அவள் கண்கள் மட்டும் மூடி இருந்ததால் அவள் உடலைவிட்டு உயிர் பிரிந்து போயிருக்கும் என்று பார்ப்பவர்கள் சந்தேகித்து இருப்பார்கள். அந்தளவிற்கு அவளில் மூச்சுவிடும் அசைவு கூட இருக்கவில்லை. அவள் உயிர் அவளைவிட்டுப் பிரிவதற்கும் அவளோடு இருப்பதற்கு மான நடு எல்லையில் போய் நின்று கொண்டது. வாழ்தலில் பெரும் ஆசையும் ஆர்வமும் வந்து வாழ்வில் குதூகலம் உச்சமடங்காக இருந்த வேளையில் அனைத்தும் தடம்புரண்டு அவளது மகன் தரன் வடிவில் வைத்தியசாலையில் தவித்துக் கொண்டிருந்தது. உலகில் எந்தத் தாய்க்கும் கிடைக்கக் கூடாத பெரும் சாபம் மகன் வாழ்வின் இறுதி நாளை முன்கூட்டியே அறியக் கிடைப்பது. அந்தச் சாபம் கனகத்திற்குக் கிடைத்து இருந்தது.

**ஆர்த்திகா சுவேந்திரன்**

விறைத்துப் போய் இருந்த கனகத்தின் மனசாட்சி அவளைவிட்டு வெளியே வந்து அவளிடம் பற்பல கேள்விகளைக் கேட்டு துளைத்துக் கொண்டிருந்தது. 'தலையிடியும், காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்பதன் அர்த்தம் சரியாக விளங்கும் நிலையில் இருந்தாள் கனகம். என்னதான் போதைப் பொருள் விற்பனையில் அவளும் கணவனும் சம்பந்தப்பட்டிருந்தாலும் அது பிள்ளையைப் பாதித்துவிடக்கூடாது என்பதில் கனகமும் அவள் கணவனும் மிகக் கவனமாகவே இருந்தனர். அதைத் தாண்டியும் எவ்வாறு இப்படி ஆனது என்பது அவளுக்கு விளங்கப் பல மணி நேரங்கள் ஆகின.

இன்சோலைக் கிராமத்தில் காதலர்களாக நுழைந்து மணம்



கவிதை எழுதுவதில் நிரம்ப நேரத்தைச் செலவிடும் ஆர்த்திகா சிறுகதைத் துறையிலும் சளைக்காமல் சாதனைகளை மேற்கொண்டு வருகிறார். சமீபத்தில் உள்ளக்கிடங்கு சிறுகதைத் தொகுதி இலக்சுமி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து சீரான நல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டி ருந்தவர்கள் தான் கனகமும் அவள் கணவன் காந்தனும். அவர்களின் காதல் வாழ்க்கைக்குப் பரிசாகக் கிடைத்தவன் தான் தரன். இருப்பதைக் கொண்டு வாழ்வதற்கு உதாரணமாக, ஒழுக்கத்தின் அடையாளமாக அனைவருக்கும் உதவி செய்பவர் களாகவும், அனைவரோடும்



இனிமையாகப் பழகுபவர்களாகவும், பொறாமை, தீய எண்ணங்கள் ஏதும் இல்லாதவர்களாகவும் அவர்கள் வாழ்ந்து வந்தனர். புதிதாக அந்தக் கிராமத்திற்கு வந்தவர்கள் என்று கூற முடியாத அளவிற்கு அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் போலவே மிகக் குறுகிய காலத்தினுள் அவர்கள் கிராமத்துடன் ஒட்டிவிட்டிருந்தனர்.

காந்தன் பட்டதாரி. அவன் தன்தொழிலாக வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தான். கனகத்தின் உதவியும் தரனின் அதிஷ்டமும் அவனது கடின உழைப்பும் அவனது வியாபாரத்தை நிலைக்க வைத்து அவர்களுக்குப் போதுமான அளவு வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆடம் பரம் வேண்டும் என்று அடம் பிடிக் காத மனைவியும், அன்பைவிடப் பொருட்களே பெரிது என்று எண்ணாத மகனும் கிடைக்கப் பெற்ற காந்தன் கவலை ஏதுமின்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தான். மகன் வளர வளர அவனது தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க வியாபாரமும் அதிகமாகிக் கொண்டு வர அவர்களுக்கு பணம் என்பது அவர்கள் நிம்மதியைக் குலைக்கும் ஒன்றாக இருக்கவில்லை.

தரன் சிறந்த பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டான். பாடங்களில் மட்டுமல்ல, விளையாட்டு, சங்கீதம் என புத்தகக் கல்வியும் தாண்டி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஆர்வ மாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது மட்டுமல்ல, முதலிடத்திலும் இருந்தான். ஊரினுள் எப்படி அனைத்து நல்ல விடயங்களுக்கும் தரனின் குடும்பம் முன்மாதிரியோ அது போலவே பாட சாலையில் தரன் அனைத்து மாணவர்க ளுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர நகர அவனது ஆற்றலும் வளர்ந்து கொண்டிருந்தது. அவன் மனம் இலத்திரனியல் நோக்கி ஈர்க்கப்பட்டு ஆசிரயர்களதும் அதிபரதும் வழிகாட்டலுடனும், உதவியுடனும் ஒரு புதிய இலத்திரனியல் சாதனம் ஒன்றை உருவாக்கி அதைத் தனது கிராமத்தினரின் பயன்பாட்டிற்குக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தரம் பத்திலேயே அதற்குள்ளும் நுழைந்து இருந்தான். வகுப்பிலும் கூட அவனே முதல் மாணவனாகத் திகழ்ந்தான். தரன் நாட்டிலே மிகப் பெரிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறான் என்பதை அவனைத் தெரிந்த அனைவரும் அறிந்து வைத்திருந்தனர்.

காந்தன் கனகம் தம்பதியினருக்கு மிகச் சிறப்பான பிள்ளைச் செல்வம் கடவுளால் வழங்கப்பட்டிருந்தது. அதனால் அவர்களுக்கு கவலைப்பட எந்தக் காரணமும் இல்லாமல் இருந்த வேளை காந்தனின் வியாபார நிலையத்தில் அவனுக்கு ஊழியனாக இணைந்த நிமலன் கொஞ்சம் கொஞ்சமாக காந்தனுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். காந்தனின் இயல்புகளும் அவன் இயல்புகளும் ஒத்ததாக இருந்ததால் இருவருமே மிகக் குறுகிய காலத்திலேயே அனைத்துத் தனிப்பட்ட விடயங்களையும் கூடப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு நெருக்கமானார்கள். ஆனால், குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் தான் நிமலனின் உண்மையான குணம் அதில்லை என்பது அனைவருக்கும் தெரிய வந்தததது.

தரம் குறித்து எந்தச் சிந்தனையும் இல்லாது நிமலனுடன் அவ்வளவு நெருக்கமாகவும் இயல்பாகவும் பழகும் முதலாளி காந்தனைப் பார்க்கும் போது அங்கு பணி புரியும் அனைவருக்கும் காந்தன் மீதுள்ள மதிப்பு அதிகமாகும். அதே வேளை 'காந்தன் ஏமாற்றப்படப் போகிறானோ? காந்தன் ஏமாற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறானோ' என்ற சந்தேகமும் இருக்கவே செய்தன. ஆனால் ஏனோ இந்தச் சந்தேகம் காந்த னுக்கு ஏற்படவேயில்லை. அதுவே காந்தன் வாழ்வின் முற்றுப் புள்ளியாக அமையப் போகிறது என்பதையும் அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

காந்தனோடு முடிந்தளவு நெருங்கி விட்டதை உணர்ந்த நிமலன் அடுத்த கட்டமாக அவனுக்கு போதைப் பொருளின் மீது நாட்டத்தை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தான். எவ்வளவு கடினப்பட்டும் நிமலனால் காந்தனோடு பழக முடிந்தளவுக்குக் கூட அவ்வளவு இலகுவாக போதைப் பொருளை அவனுக்குப் பழக்க இயலவில்லை. ஆனால், எறும்பூரக் கற்குளியும்தானே. நிமலனின் விடா முயற்சி காந்தனைப் போதைப் பொருள் பாவனையாளராக ஆக்க முடியாவிட்டாலும் போதைப் பொருள் வியாபாரத்திற்கு சம்மதிக்கும் அளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதை மாற்றிவிட்டிருந்தது. எதையும் மனைவியுடன் கலந்தாலோசித்து செய்யும் காந்தனுக்கு நிமலன் அளித்த மனமாற்றுதல் கனகத்தின் மனதையும் மாற்றி அவளையும் தனக்கு துணையாக ஆக்க பாரிய துணை புரிந்தது.

நிமலனால் காந்தனின் மூளைக்குக் கொடுக்கப்பட்ட மருந்து கனகத்திலும் பாதிப்பை ஏற்படுத்த ஆரம்பத்தில் அரை மனதோடு சம்மதித்தவள் பின் வியாபாரம் அதிகமாக அதிகமாகப் பணம் வரவர அவளும் முழுமையாக அவர்களுக்கு உதவி செய்யத் தொடங்கினாள். அந்தக் கிராமத்தில் போதைப் பொருளைக் கொண்டு வருகின்ற முக்கிய புள்ளிகளாக காந்தனும் கனகமும் மாறினர். நாளுக்கு நாள் அவர்களின் செல்வம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அவர்களது நிலம் மூன்று மடங்கானது. வீடு சிறந்த சுற்று மதில்களோடு மாளிகை போல ஆனது. புதிதாக கார் ஒன்றும் இணைந்து கொண்டது. இவ்வாறு காந்தனால் பல வருட வியாபாரத்தினால் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்த அனைத்தையும் இந்தப் போதைப் பொருள் கடத்தல் மிகக் குறுகிய காலத்தினுள் அவர்களுக்குக் கொடுத்து இருந்தது.

கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று சொல்வதைப் போல அவர்களிடம் செல்வம் சென்று குவிந்து கொண்டு இருந்தும் அவர்களின் சிறந்த பழக்கவழக்கங்களில் எந்த மாறுதல்களும் ஏற்படவில்லை. அதனால் ஊர் மக்களுக்கும் அவர்கள் செய்யும் தொழிலில் எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. காந்தனும் கனகமும் ஒரு போதும் தவறான வழிக்குப் போகமாட்டார்கள். அவர்களின் சிறந்த குணங்களுக்குக் கடவுள் கொடுக்கும் பரிசு தான் அந்த செல்வம் என்பதை அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இது போதைப் பொருள் கடத்தலுக்கு மிகப் பெரும் உதவியாகவும் இருந்தது.

இவர்கள் வளர்ந்து கொண்டு செல்லச் செல்ல அந்தக் கிராமம் அழிவை நோக்கி விரைவாகப் புறப்படத் தொடங்கி இருந்தது. போதைப் பொருள் அதிகமாக உலவ ஆரம்பிக்க அது மாணவர்களிடையேயும் பரவத் தொடங்கியது. இதைக் கேள்விப்பட்டதும் படபடத்த கனகம் அதன் பின் தரனை மிகப் பக்குவமாகக் கண்காணிக்க ஆரம்பித்தாள். தரனும் அது எதிலும் ஈடுபடாமல் தனது ஆய்விலேயே அதிக நேரங்களைச் செலவிட்டுக் கொண்டிருந்தான்.

இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருந்த வேளை தரன் தனது கண்டுபிடிப்பின் எண்பது வீதத்தை நிறைவு செய்திருந்த வேளை அவன் சாதாரணதரப் பரீட்சைக்கு முகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டிய காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது. தேசியமட்டத்தில் முதல் பத்து மாணவர்களுக்குள் வந்து பாடசாலைக்கு பெருமை சேர்க்கப் போகின்றவன் தரன் என்பதை எண்ணி அனைத்து ஆசிரியர்களும் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தனர். அவனும் அதற்கேற்றாற் போல கல்வியிலும் சிறந்து விளங்கினான்.

சாதாரணதரப் பரீட்சைக்கு இருபது நாட்களே இருந்த போது ஒரு நாள் வீட்டிற்கு வந்த தரன் மயங்கி விழ கனகம் பதறியடித்துக் கொண்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றாள். ஆரம்பத்தில் பரீட்சை நெருங்குவதால் கல்விச் செயற்பாடுகளிலும் ஆய்வுச் செய்ற்பாடுகளிலும் அதிக நேரத்தை செலவழிப்பதால் உடல் பலவீனப்பட்டிருக்கக் கூடும் என்றே கனகம் எண்ணி இருந்தாள். ஆனால் வைத்தியர்களோ அவ்வளவு இலகுவாக அவனை வீட்டிற்கு அனுப்புவதாக இல்லை. புதிது புதிதாகப் பல சோதனைகளை தரனுக்குச் செய்தனர். இன்று நாளை நாளை என்று பத்து நாட்கள் ஓடி இருந்தன. ஆனால் வைத்தி யர்கள் தரனை வீட்டிற்கு அனுப்புவதாக இல்லை. அவன் உடலும் பழைய நிலைமைக்குத் திரும்புவதாகவும் தெரியவில்லை.

உள்ள தெய்வம் எல்லாவற்றையும் வணங்கி நாட்டின் மிக அனுபவசாலி வைத்தியர்களை எல்லாம் வைத்து வைத்தியம் பார்த்தும் முன்னேற்றம் ஏதுமில்லாததைக் கண்டு திக்கித் திணறிய காந்தனும் கனகமும் இறுதியாக வைத்தியரிடம் காலில் விழாத குறையாக நிலைமையைக் கேட்டு அறிந்து கொண்டனர். தரன் அளவுக்கு அதிமாக குறிப்பிட்ட வகைப் போதைப் பொருளைக் கடந்த சில காலமாகப் பாவித்து வந்திருப்பதாகவும் அது அவன் உடலை அபாரமாகப் பாதித்து இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதாகவும் இன்னும் பத்தோ இருபதோ நாட்களைத் தாண்டுவதே கடினம் என்றும் தம்மால் இயன்ற முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் இனிக் கடவுள் விட்ட வழி என்றும் கூறி இருந்தனர்.

இதைக் கேட்ட கனகத்தின் பாதி உயிர் அவளைவிட்டுப் பிரிந்து போய் இருக்க, விறைத்துப் போய் இருந்த அவளுக்கு வெளியே வந்த அவள் மனசாட்சி அவளை கேள்வி கேட்டுக் குடைந்து கொண்டிருந்தது. ஒரு தாயின் கண்மூடித்தனமான செயற்பாடு ஒரு தாயின் மகனையும் நாட்டின் சிறந்த ஒரு பிரஜையும் இழக்கச் செய்திருந்ததை உணர்ந்த அவளுக்கு இவ்வாறு எத்தனை பிரஜைகளின் அழிவுக்கு அவளும் ஒரு காரணம் என்பதை அவள் மனசாட்சி அவளுக்கு உணர்விக்க முயன்று கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டுப்போன காலம்

நண்பனை சந்திப்பதற்காக பஸ்ஸை எதிர்பார்த்துக்கொண்டு பஸ் தரிப்பிடத்தில் நீண்ட நேரமாக காத்துக் கொண்டிருக்கிறேன் பஸ்வருவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை இப்படித்தான் ஒரு அவசரத்திற்கு நான் எதிர்நோக்கும் குறிப்பிட்ட பஸ் பல முறை என்னை திறீவீலறில் போகவைத்திருக்கின்றது. கால்கள்வலி எடுத்த போதும் அமர்ந்துகொள்ள இடம் இல்லா தபடி தரிப்பிட ஆசனத்தை ஆர்ப்பரித் திருந்தார்கள் எனக்கு முன் வந்தவர்கள்,



● எம் சீ ஏ பரீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எல்லோரும் பஸ்சுக்கா கத்தான் காத்திருக்கின்றார்களா என்று எவராலும் சரியாகக்கூறமுடியாது உண்மையான பிரயாணி கால் வலிக்க காத்துக் கொண்டிருப்பான். சில இளசுகள் கதை அளந்துகொண்டும் தமது காதலுக்குத்தீனிபோட்டுக்கொண்டும் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப் பார்கள்

காலம்கெட்டுப் போய்விட்டது என்று யாரும் சும்மா சொல்லியிருக்க மாட்டார்கள் இப்போ இந்த நிமிடம் எனக்குப்பின்னால் காலம் கெட்டுக் கொண்டுதான் போய்க்கொண்டிருக்கிறது என்றால் நம்பவா போகிறீர்கள்!

"என்மீது நம்பிக்கை இல்லையா"

"அப்படி இல்லை அதெல்லாம் பிறகு பார்ப்பம்"

"பிறகு என்றால்.."

"கலியாணத்திற்கு அப்புறம்"

"அதெல்லாம் முடியாது எனக்கு இப்போ வேணும்"

"முடியாது.."

"முடியாது என்றால் இன்றுதான் கடைசி, நான் இனி உன்னை சந்திக்கவே மாட்டேன்"

எனக்கு இந்த வசனங்களை வைத்து ஒரு சிறுகதையோ ஒருநாடகமோ எழுதிவிடலாம் என்று தோண்றினாலும் இந்த இடத்தில் காலம் சென்ற டைரக்டர் பாலச்சந்தர், அல்லது பாக்கியராஜ் அல்லது பாரதிராஜா யாராவது ஒருவர் பஸ்சுக்காக காத்துக்கொண்டிருந்தால் வயது வந்தவர்களுக்கான ஒரு திரைப்படத்திற்கு நல்ல வசனம் கிடைத்து விட்டதோறணையில், முத்தக் காட்சிக்கு கமலஹாசனை போடுவதாஅல்லது ஒரு புதுமுகத்தை போடுவதா என்றும் தலையை சொறியக்கூடும்

வீட்டில்மகனோ..மகளோ மாலை நேரவகுப்புக்கு போயிருப்பார்கள் இன்னும் பஸ் கிடைக்கவில்லை போலும் என்று பெற்றோர்கள் விஜேய் ரீவியின் முன்னால் ஆறுமணி நாடகத்தின் அனுசரணை விளம்பரங்களை பார்த்துக் கொண்டிருப்பார்கள், ஆனால் இங்கு செல்வங்கள் திரைப்படத்திற்கு ஒத்திகை பார்த்து கொண்டிருக்கிறார்கள் என்று எவராவது சொன்னால்

"நாங்கள் அப்படி பிள்ளை வளர்க்க வில்லை நீ உமது வேலையைப் பார்" என்று சண்டைக்கு வரக்கூடும்"

அதோ பஸ் வந்துவிட்டது நான் போகவேண்டும் வீட்டில் தேடிக்கொண்டிருப்பார்கள் நாளைக்கு எல்லாம் தருவன்"அவள் வேண்டிக்கொண்டு நின்றாள். பஸ் உறுமிக்கொண்டு வந்து நின்றது. அவன், அவளது கையை பற்றிக்கொண்டு நின்றான் "அண்ணே றைற்" நடத்துனர் அவர் காலத்து சினிமாப்பாடலின் வரிகளுக்கு புதிய வடிவில் இசையமைத்துக் கொண்டிருந்தார், பஸ் நகர ஆரம்பித்தது, தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்தன, அவள் சிணுங்கிக் கொண்டு கீழேவிழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தைகூட உணராதவளாய் அவனுக் குள் கட்டுண்டு நின்றாள், அடுத்த பஸ் வருவதென்றால்.. வீட்டில் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நாடகத்தின்தொடர்முடிவில்,தொடரும் என்ற வாசகத்திற்கு பதிலாக "நாளை அவள் வருவாளா." என்றுஅன்றைய நாடகத்தின் மாமி மருமகள் சண்டைகாட்சியை முடிக்கவேண்டும்,

"என்னங்க இன்னும் மகள்வரயில்ல இருளாயிற்று ஒருக்கா டவுன்வரை பார்த்திட்டு வாங்களன்"

"இன்று பஸ் லேட் போல சைக்கிலுக்கும் பெற்றோல் கம்மியாக கிடக்கு மீண்டும் பெற்றோல் வரிசைகள ஆரம்பித்திட்டாங்க சற்று பார்ப்போமே மகள் திறீ வீலரிலாவது வந்து சேரும்"

வீட்டில்.. பெற்றோர்களுக்கு மகளும் வேண்டும் நாடகமும் வேண்டும் என்று நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பார்கள்,ஆனால் இங்கு நடப்பதோ வேறு அவள் அவனுடன் திறீவீலறில் தொத்திக்கொண்டு போனதை நம்பவே மாட்டார்கள். இந்த அசிங்கத்தை யாரிடம் போய் சொல்வது இந்த சமுகத்தை எப்படி திருத்துவது சில வினாடிகள் அவர்கள் விட்டுச்சென்ற இடத்தில் அமர்ந்தவனாக சமூக சீர்திருத்தவாதி என்ற நினைப்புடன் வெளியே சுற்றும் முற்றும் நோட்டமிடுகின்றேன். நான் போக வேண்டிய பஸ்ஏறமுடியாத நெரிசலுடன் முன்னால் வந்து நிற்கின்றது ஒருமுறை பார்த்தால் மீண்டும் ஒரு முறை பார்க்கத்தூண்டும் அழகுடன் ,எனது கணிப்பில் இருபது வயதை எட்டியவளாக யாரோ அவள் யாரோ ஒருவனுடன் இறங்கிக்கொள்கிறாள் யாரோ அவன் "மீண்டும் நாளை"என்ற சைகையுடன் அவளை தனியே விட்டுவிட்டு எதிரேவந்த திறீவிலரில் மறைந்துபோகிறான்.

இனி நானும் முப்பது ருபாய்க்குள் செல்லவேண்டிய பிரயாணத்தை முன் னூறு ருபாய் கொடுத்தாவது திறீவீலரில் செல்லவேண்டியது தான், செல்ல வேண்டிய பாதைகள் தெரியாவிட்டால் ஐனூறோ அதற்கு மேலயோ செலுத்த வேண்டி இருக்கும். அப்படித்தான் திறீவீலர் ஓட்டுனர்கள் அப்பாவிகளை கொள்ளை யடித்துக் கொண்டிருக் கிறார்கள் , ஒருமுறை கொழும்பிற்கு வந்த புதிதில் கையில் இருந்ததை எல்லாம் தொலைத்துவிட்டு நண்பர்களிடம் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் கடன் பட்டு ஊர்வந்து சேர்ந்திருக்கின்றேன்,

வாட்டசாட்டமான ஒரு இளைஞன் யாரோ அவளின் முன்னால் மோட்டார்சைக்கிளை முறுக்கிக் கொண்டு அழைக்கின்றான். இப்போது யாரோ அவள் யாரோ ஒருத்தனுடன் தொத்திக்கொண்டு பறந்து சென்று விடுகிறாள். நான் சைக்கிளின் பின் வெளிச்சம் மறையும் மட்டும் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு என்ன தேவை இல்லாத வேலையெல்லாம் யார் யாரோடும் போகட்டுமே ஏன் வீணாக மற்றவர்களின் விடயத்தில் தலையிட்டு தலையை குழப்புகிறாய்" எனது மனசாட்சி உறுத்திக் கொண்டிருக்கிறது,

"எதுவென்றாலும் பரவாயில்லை அடுத்தவனின் பொருளில் ஆசைப் படக்கூடாது கடைசியில் உமக்கு அது அழிவைத்தான்கொண்டு வரும்"

என்றோ ஒரு நாள் இஸ்லாம் பாட ஆசிரியர் கூறிய அந்த வார்த்தைகளுடன் இஸ்மாயில்சேர் நினைவில் வந்து போகிறார்.

பாடசாலை வாழ்க்கை என்பது எவராலும் மறக்கமுடியாத காலங்கள் தான் ஆசிரியர்கள் மறைந்தாலும் அவர்களின் சில அறிவுரைகள் காலம் முழுதும் வாழ்ந்துகொண்டே இருக்கும். சில தவறுகளின்போது அவர்களின் போதனைகள் முன்னால் வந்து எம்மை காப்பாற்றவும் கூடும்

அது ஒரு நிலாக்காலம்தான் ஆனால் மிக மிக அண்மையில் சீருடை அணிந்து வரும்படிஅறிவுரை கூறிய அதிபரை மாணவன் தாக்கிய சம்பவங்கள் ஊடகங்களில் பதிவாகி இருப்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதும் எதிர்கால சந்ததிகளுக்காக தடுக்கப்பட வேண்டியவைகள்.

"மச்சான் எங்கடா நிற்கிறாய் நான் வரவா.."

நான் சந்திக்க வேண்டிய நண்பனின் கைபேசி அழைப்பு அது.

"தேவை இல்ல மச்சான் இதோ நான் வந்து கொண்டிருக்கிறேன்"

ஒரு பொய்யை சொல்லிவிட்டு தொலை பேசியை துண்டித்து விடுகிறேன், இருந்த போதும் நண்பனின் அந்த அழைப்பு இல்லா விட்டால் இன்னும் பல அசிங்கங்களை தலையில் அள்ளிப் போட வேண்டி இருக்கும் . திறீவீலரை அழைக்கப் போன என்னை ஒரு குரல் வழிமறிக் கின்றது.

"எங்க போகப் போறிங்க "

" "

"பக்கத்திலதான் ஹோட்டல் இருக்கு பெரிசா தேவையில்ல"

"ம்...எவ்வளவு.."

"ஐநூறு.." யாரோ அவளுடன். நான் பக்கத்தில் சற்று தள்ளி அமர்ந்திருந்த பிச்சைக்காரனிடம் யாரோ அவள் கேட்ட ஐநூறை கொடுத்துவிட்டு திறீவீலரில் ஏறிக்கொள்கிறேன். அவனது ஒருவேளை பசியாவது தீர்ந்து விடட்டும் எண்று கொடுத்து விட்டு எதிரே வந்த திறீவீலரில் ஏறிக் கொள்கிறேன். ஒருவேளை என்னை அவள் ஆண்மை இல்லாதவன் என்றோ இந்தக் காலத்திலும் இப்படியானவனா என்றோ எப்படி என்றாலும் நினைத்துக் கொள்ளட்டும். திறீவீலருக்குள் இருந்த படி அவளை நோட்டமிட்டபோது அவள் அந்த பிச்சைக்காரனுடன் கதைத்து கொண்டு நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிசைச் சேர்ந்த இவர் பல நூல்களுக்குச் சொந்தக்காரி. மஞ்சரியில்பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

# தாய்மை

**கமலினி கதிர**



காலை ஐந்து மணிக்கே எழுந் துவிட்டாள் பிரேமினி. மாசிமாதக் குளிர் திறந் திருக்கும் சாளரத்தினூடே வீட்டுக்குள் நுழைய முயன்றது. பிரேமினி மெதுவாக சாளரத்தை மூடினாள். படுக்கையில் படுத்திருக்கும் மகன் ஆதவனுக்கருகே சென்றவள் அவனது போர்வையைச் சரிசெய்த வண்ணம் அவனையே பார்த்தபடி சில நிமிடங் கள் நின்றாள். இன்றைக்கு பிறந்தது போலிருக்கிறது பதினைந்தாண்டு கள் பறந்தோடிவிட்டனவே. அவளுக்கு தலைக்கு மேல் வேலைகள் இருந்ததென்றாலும் அவனருகே மெதுவாக அமர்ந்தாள். அவன் தலையைத் தடவி உச்சியில் முத்தமிட்டு முகத்தை லேசாக வருடினாள். எந்த வித சலனமுமில்லாமல் ஆதவன் படுத்திருந்தான். இரவில் படுக்கையிலேயே நனைத்து விட்டானா எனப் பார்த்து மெதுவாக அதனை மாற்றிவிட்டு தன் காலைக்கடனை முடித்து பரபரப்பாக சமையல் செய்யத் தொடங்கினாள். குளிர்சாதனப் பெட்டி இருந்தும் இரண்டு நாளைக்கு ஒருமுறை சமைத்து வைக்க முடியாது. தினமும் புதிதாக உணவு சமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவளது கணவனின் உத்தரவு. மீறும் தைரியம் அவளுக் கில்லை.

சமையலறையில் வாயு அடுப்பைத்திறந்து தண்ணீர் வைத்து விட்டு சாளரக் கதவுகளைத் திறக்க வும் புதுக்காற்று உள்ளே ஓடிவந்து சுவாசத்தில் நுழைய மூச்சை இழுத்து விட்டாள். வெளியே மரங்களின் மேல் நுரை போன்று மாசி மாதத்துப் பனித்துகள்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக படிந்திருந்தன. பனிப் புகார் மெல்லென வானத்தை ஆக்கிர மிக்க நட்சத்திரங்கள் மெது வாக மறைய ஆரம்பித்தன. சத்தம் போடாமல் வெளியே பனிநுரையை ஏந்திய வண்ணம் ரோஜாப்பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் மணத்தை எந்தவித எதிர்பார்ப் புமின்றி மென்மையாக சுமந்தபடி காற்று எங்கும் பரப்பிக்கொண்டு சென்றது. காலை நேரத்துக்கே சொந்தமான இனிய மணத்துடன் பூக்களின் வாசனையும் இணைந்தது. பிரேமினிக்கு இயற்கையை இரசிக்க மிகவும் பிடிக்கும். ஆனால் இந்த அவசரயுகத்தில் எதற்கும் நேரமே இல்லையே. எட்டு மணிக்கெல்லாம் பாடசாலை சென்றுவிட வேண்டும். உதவிக்கு வரும் மேரியைக் காணவில்லை. தானே தேங்காயைத் துருவத் தொடங்க விடுங்கம்மா. நான் துருவித் தாறன். இரவு என் மகள் துாங்காமல் ஒரே இரு மல். அதுதான் விடிய கொஞ்சம் அசந்து துாங்கீற்றன்; நேரம் கழித்து வந்ததற்கு காரணத்தைச் சொல்லியவண்ணம் பரபரவென வேலை செய்தாள். அவருக்கு கட்டாயம் காலை இடியப்பத்துக்கு சம்பல் வேணும். அத்தோடு தேங் காய்ப்பால் மணக்க சொதியும் வேணும். மேரி வெளியிலிருக்கும் அம்மியில் சம்பல் அரைக்கத் தொடங்கினாள். ஒரு அடுப்பில் இடியப்பமும் மற்ற அடுப்பில் நேற்றே ஆய்ந்து வைத்த கீரையையும் வைத்தாள். பாலைப் பிழிந்து மேரி வெட்டிக் கொடுத்த முருங்கக்காயுடன் வெந்தயமும் சேர்ந்து ஒருவித வாசனை யுடன் குழம்பு கொதித்தது. இதற்குள் இறாலோ, கருவாடோ போட்டால் எப்படியிருக்கும்? மனம் கடந்த காலத்தை அசைபோட்டது. முருங்கக்காய் பிரட்டல் வைத்தால் அதற்குள் அம்மா இறால் போடாமல் விட்ட நாட்களில் தான் அவவைப் போட்டுப் படுத்திய பாடு மனதில் நிழலாடியது.

மரக்கறி உணவு உண்ணும் ஒருவரைக் கல்யாணம் செய்துவிட்டு இதற்கு எல்லாம் ஆசைப்படலாமா? சாப்பிட்ட நாக்கு அந்த ருசியைத் தேடியது. காதலிக் கும்போது இது ஒரு பிரச்சனையாகத் தெரியவில்லை. அவர் சாப்பிடாட்டி என்ன நான் சாப்பிடலாந்தானே. முதல் நாளே அதற்கு முட்டுக்கட்டை போட்டு விட்டார். என்னுடைய குழந்தைகள் மாமிசம் உண்ணாதவர்களாய் தானிருக்க வேண்டும். கருவிலும் அதன் சாயல்கூடப் படக்கூடாது. மாமிச உணவு ஆசை குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. முன் அதுபற்றிப் பேதாதது எவ்வளவு முட் டாள்த்தனம் என்று எண்ணி யெண்ணி கவலைப்பட்டது ஆதவன் பிறப்புடன் நின்று விட்டது. பிடித்த விடயங்களை விட்டு வாழ்வதுகூட ஒரு கஷ்டமான விரதம் மாதிரித்தான். பெரு மூச்சுடன் நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத் தாள்.

காதலிக்கும்போது அவரது ஆன்மீக அறிவு கண்டு பிரமித்து இருக்கிறாள். சமயமும் ஆன்மீகமும் வெவ்வேறானவை யென்பது அவருடன் பழகும் காலங்களில்தான் அவளுக்குப் புரிந்தது. அவரது பூஜை அறையில் சிவன், முருகனுடன் ஜேசுவும் மாதாவும் இருப்பதும் அவர்களுக்கும் கற்பூர ஆரத்தி எடுப்பதும் அவளை வியப்பூட் டின.

மதம் என்ற முக்காடு போட்டுக் கொண்டு அதர்மச் செயலில் ஈடுபடு பவர்கள் மத்தியில் மதவெறி இல்லாமல் தியானம் போன்ற ஆன்மீக வழிபாடு செய்யும் கணவன் பூஜை அறை வைத்து உருவப்படங்களை வழிபடவும் செய்வது அவளுக்கு முரணாகவே பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்பற்றி ஒருமுறை கேட்ட போது அவர் தங்கள் பிள்ளைகள் இவற்றை யெல்லாம் அறிந்து பின் தாங்களாகவே தங்களுக்கான பாதையைத் தெரிந்து ஆன்மீக முதிர்ச்சியைத் பெறவேண்டு மென்பதற்காகவே என்று கூறியபோது அவரின் அறிவைப் பாராட்டவே செய்தாள். தங்கள் ஆன்மீகத்தை தாங்களே கண்டறியவேண்டுமென்ற மத சுதந்திரம் பிள்ளைகளுக்கு வழங்கப் பட்டதையிட்டு அவளுக்கு பெரு மகிழ்ச்சியே.

இன்றுகூட அவரது ஆன்மீகச் சிந்தனைகளில் அவள் மயங்கித் தானிருக்கிறாள். ஆன்மீகம் என்பது ஒரு மதமல்ல என்றும் தியானம் ஒரு சடங் கல்ல. கடவுளைத் தேடுதல் என்பது மந்திரங்கள் சொல்வதல்ல என்பது போன்ற அவரது கருத்துகள் தான் அவளை அவர்பால் ஈர்த்தன. உடலை வருத்தி விரதம் இருப்பதோ தேவாரங் களை சதா முனகுவதோ இறைவனை உணரத் தேவையில்லாதவை என்பது அவளுக்கும்உகந்ததாகவே இருந்தது. கடவுளை உணர மொழி தேவையில்லை. இறைமை மொழிகளைக் கடந்தது எண்ணங்களை மீறியது, புலன்களைத் தாண்டியது என்று அவர் சொல்வதைக் கேட்கும்போது அவளுக்கு பெருமிதமாக இருக்கும்.இத்தனைக்கும் இந்து சமயத்தில் கடவுளின் மொழியாகக் கருதப்படும் சமஸ்கிருதத்தைக் கரைத் துக் குடித்தவர் அவர்.கோவிலுக்கு வெளியே தான் ஆன்மீகம் இருக்கிறது என்று அவர் கூறுவதில் பிரேமினிக்கும் எந்த மாற்றுக் கருத்தும் இருந்ததில்லை. கோயில்கள் வியாபார ஸ்தலங்களாக மாறிக்கொண்டு வருவது பற்றி இருவ ருமே கவலைப்படுவார்கள்.கடவுளை ஆராதிப்பதற்கு விலை நிர்ணயிக்கப் படுவது எவ்வளவு கேவலமான செயல் என்பது பற்றி அவர்களின் மாணவர் களுக்கு அடிக்கடி அவர் கூறிவருவார். ஒரே நேர்க்கோட்டில் தாம் இருவரும் பயணம் செய்வதையிட்டுப் பெருமித பட்டு இருக்கிறாள்.

ஆசையை அறுத்த புத்தரின் பெயரைச்சொல்லிக் கொண்டு நடக்கும் அநியாயங்களை பகிரங்கமாகவே விமர் சிப்பார். கண்டியில் முன்பு வேலை பார்த்தபோது பலரின் பகையை சம் பாதித்ததும்இ அதனாலேயே எழுபத்தி ஏழாம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின் போது அவர் மயிரிழையில் உயிர் தப்பியதும் அதனையடுத்து இருவரும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றல் வாங்கி வந்ததும் அவளை அடிக்கடி நினைவுகூர வைக்கும். உலகத்தை உற்றுநோக்கும் கணவனின் திறனும் அனைத்தையும் தான் நினைத்த கோணத்தில் உள்வாங் குந்திறனும் அவற்றை மற்றவர்களுக்கு புரியும்படி வெளிப்படுத்தும் மொழி யாற்றலும் அவள் கண்களை விரியவே செய்திருக்கின்றன. மற்றவர்கள் முன் தன் கணவனை பெரிய ஜீனியசாக பெருமைப்படுவாள்.தன் ஆசிரியத் தோழிகளுக்கும் பெருமையுடன் கூறுவது அவளுக்குப் பிடித்தமானது.

மனம் எங்கெங்கோ அலைய சமையலும் முடிந்தது.நேரமோ ஓடிக்கொண்டிருக்கிறது. இனி பப்படம் பொரிக்க வேணும்.மேரி எத்தனையோ தரம் சொல்லிவிட்டாள். என்னம்மா இப்பிடி இருக்கிறீங்க.ஒரு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு பப்படம் பொரித்து வைக்கிறதுதானே. இதெல்லாம் ஐயாவுக்கு தெரியவா போகுது?

ஆனால் ஒவ்வொருநாளும் பொரிப்பதை அவள் நிறுத்தியதே இல்லை. படிக்காத மேரிக்குத் தெரிந்த அந்த சின்ன லொஜிக் அவளுக்கு தெரிந்திருக்கவே இல்லை. மேரிக்கு பாத்திரங்களை துலக்கப் போட்டுவிட்டு அவசரமாக குளிக்கப் போனாள். சில நேரங்களில் நேரமாயிட்டுது. பப்படம் பொரிக்கேலை என்றால் சரி வந்தவுடன் பொரியும் என்பார். பள்ளியால் இரண்டு மணிக்கு களைத்து வந்து அதன்பின் பப்படம் பொரிப்பதென்பது அவளுக்கு எரிச்சலூட்டும். மேரியும் பிரேமினி வந்தவுடனேயே

"அம்மா. இனி நான் போறன். பிள்ளைகள் வந்துவிடுவினமென்று சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்து விடுவாள். ஆதவனைப் பார்க்கும் பொறுப்பு அன்று அவளுக்கு நிறைவடைந்து விடும். கைகால் அலம்பிய பின்னர் ஆதவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து அவன் கைகளை நீவி விட்டு முத்தம் கொடுத்துவிட்டுத் தான் சாப்பிட உட்காருவாள். ஆதவனுக்கு பால் மட்டுமே உணவு. அதுகூட பலநேரங்களில் செமிக்காமல் சத்தியாகவே மலமாகவோ வெளியேறிவிடும். அவளுக்கு முன்னதாகவே கணவன் வந்திருந்தாலும் எடுத்துப்போட்டு சாப்பிட மாட்டார். பிரேமினி கையால் போட வேண்டும். ரசித்து ருசித்து சாப்பிடுவதும் ஆ! என்னமாதிரி இன்று முருங்கக்காய் கறி என்றோ... கத்தரிக்காய் கறியென்றோ புகழாமல் சாப்பிட மாட்டார். வந்தவுடன் ஆதவனிடம் ஓடி அவனுக்கென்ன புரியவா போகிறது. சாப்பிட்டுவிட்டு அவனிடம் போறது தானே என்பார். அது அவளுக்கு தெரியாதா?. ஆனால் தாய்மைக்கு அது புரிவதில்லையே. எந்த ஆண்மகனும் அதைப் புரிந்து கொள்ள வாய்ப்பல்லை.

கடவுளைப் பற்றிய அவரது கருத்துகள் பலருக்கு புரிவதில்லை. அவரை ஒரு நாஸ்திகவாதியாகப் பலர் புரிந்து வைத்திருந்தனர். சிலர் அவர் கடவுளை மதிக்காததால்தான் அப்படியொரு பிள்ளை அவர்களுக்கு பிறந்ததாக சொல்வார்கள். அவருக்கு அதைப்பற்றி எல்லாம் கவலையில்லை. சிலர் பரிகாரம் என்று எதையெதையோ செய்யச் சொல்வார்கள். அதிலெல்லாம் இருவருக்குமே உடன்பாடில்லை. அவர் சொல்வார் ஆதவனை நினைத்து நெடுக கவலைப் படாதேயும். யாரோ ஒரு சித்தர் போனபிறவியில் தான் முடிக்காமல் போன ஏதோ கர்மவினையைத் தீர்ப்பதற்காக எங்களிடம் வந்து பிறந்திருக்கிறார் போலை. எங்களை அப்படி தாய் தகப்பனாகத் தேர்ந்தெடுத்ததுக்கு நாங்கள் குடுத்து வைத்திருக்க வேணும். அவருடைய கர்மா தீருமட்டும் அவரை நாங்க பாரக்க வேண்டியது தானே. பாசமோ, பற்றோ வைக்க வேண்டாம். இதுக்காக கடவுளிடம் நான் பிரதட்டை செய்கிறேன். காவடி தூக்குறன். பிள்ளையை சுகமாக்கு என்று பேரம் பேசுவது நல்லாவாயிருக்கு. பிறகு நாங்க கேட்டது நடக்காவிட்டால் மதம் மாறுவதோ, கடவுளைத் தூற்றுவதோ சரியா என்ன? யார் என்ன வேணும் என்றாலும் சொல்லட்டும். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவனை அன்பாய் பராமரிப்பம். பற்றில்லாமல். அவ்வளவுதான். அவர் சொல்வதுபோல் தான் பிரேமினியும் இருக்கிறாள். ஆனால் மற்றப் பிள்ளை களைப் பார்க்கும் போது இயல்பாக வரும் கவலை ஏக்கத்தை தவிர்க்க முடியாமல் தாய்மை தள்ளாடும்.. ஆனாலும் சமாளித்து விடுவாள். தன் மற்ற இரண்டு பிள்ளைகளையும் விட தான் ஆதவனிடம் கூடிய அன்பு வைத்திருப்பதுபோல் சில சமயங்களில் அவளுக்குத் தோன்றும்.

அன்று வைகாசி விசாகம். பௌளர் ணமி. காலையிலிருந்தே பிரேமினிக்கு மனசு சரியில்லை. போயா தினமாகையால் பள்ளியும் இல்லை. அடிக்கடி ஆதவ னைப் போய் பார்த்த வண்ணமிருந்தாள். அவனுக்குப் பேசுவது புரிவதுமில்லை. தூங்காத நேரங்களில் தன் இரண்டு உள்ளங்கைகளையும் மாறிமாறிப் பார்த் தபடி இருப்பான். யார் பேசினாலும் எந்த சலனமுமிருக்காது. ஒரு வார்த்தை பேசவும் முடியாது. பிரேமினியும் அம்மா என்ற ஒற்றைச்சொல்லை என்றா லும் சொல்லவைக்க எவ்வளவோ முயற்சித்து விட்டாள். அவள் கணவர் கூறியதுபோல் ஒரு ஞானிபோலவே எந்தச் சலனமுமில்லாமல் தன் கையை மட்டுமே பார்த்தபடி சதா இருக்கிறான். அவர்கள் வீட்டு பசு அன்று மூழுவதும் கதறின படி. அது பிரேமினிக்கு எதையோ உணர்த்துவது போலிருந்தது. தன் மனம் தவிப்பதை உணர முடிந்தது.

இரவு பிரேமினியால் தூங்க முடி யவில்லை. அடிக்கடி எழும்பி ஆதவ னைப் பார்ப்பதும் வந்து படுப்பதுமாக இருந்தாள். சிலநேரம் அவனது நெஞ்சில் கைவைத்துப் பார்ப்பதும் மூக்கருகே கையை வைத்துப் பார்ப்பதுமாக இருந்தாள். அவள் ஒவ்வொருமுறை எழும்பும்போதும் என்ன நித்திரை வரேலயா? எதுக்கு ஆதவனை டிஸ்ரேப் பண்றீர். வந்து படும்என்று சொன்ன படியிருந்தார். ஏன் பசு கதறுது?எனக்குப் பயமாயிருக்கு என்றவளைக் கேலி செய்தார் அதற்கு சாப்பாடு காணாதோ என்னவோ?அல்லது குளிருதோ? அடுத்த வீட்டு நாயும் ஊளையிடத் தொடங் கியது. மிருகங்களுக்கு யமன் வருவது தெரியுமென்று எப்போதோ படித்தது இந்த நேரத்தில் அவளுக்கு ஞாபகம் வந்து பயமுறுத்தியது. படுக்கை முள்ளாகக் குத்த ஆதவனிடம் சென்றாள். சலனமற்றுப் படுத்து இருந்தவன் மூச்சை நிறுத்திவிட்டது போலத் தெரிய இங்கே வாங்களேன் உரத்துக் கத்தியவள் அருகில் வந்து பார்த்தவர் . அழக்கூடாது. ஒரு சித்தரின் ஆத்மா இறைநிலை அடையும் நேரம் அழுது அதை அலக் கழிக்க வைக்காதேம். அமைதியாக அந்த ஆத்மா போகட்டும்....அது சித்தரோ இல்லையோ என்னோடை குழந்தை. அதன் பிரிவுக்கு அழக் கூடவா முடியாது. பெற்ற வயிறு துடிக்க துக்கம் தொண்டையை அடைக்க விழிகளில் கோர்த்த கண்ணீரை வெளியேற்ற தெரியாமல் உள்ளே தேக்கி வைத்தபடி ஆன்மீகச் சிந்தனையில் உயர்ந்த ஸ்தானத்திலிருந்த கணவரின் பேச்சை ஜீரணிக்க முடியாமல் வெறுங்கல்லாக நின்றாள் அத்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி 32 ஒரு பார்வை

தன் வேலைப்
பழுவிற்கிடையிலும் எம்
அன்பான வேண்டுகோளை
ஏற்று எழுத்தாளர்களை
ஊக்குவித்தும் அவர்தம்
பிழைகளைச் சுட்டிக்காட்டியும்
மாதந்தோறும் உங்களை
மகிழ்விப்பவர்
**பேராசிரியர்**
**செ. யோகராசா**

## பஞ்சவர்ணம் - ந. ஜெயரூபலிங்கம்

புலம்பெயர் குடும்ப வாழ்க்கைச் சூழலில் தாய்வழிப் பெண்ணாதிக்கமும் இருக்கிறது என்பதைத் திறம்பட வெளிப் படுத்தும் சிறுகதை என்றவித்தில் பாராட் டுக்குரியதாகின்றது. அதனால் மட்டு மன்றி பஞ்சவர்ணம்(கிளி) கூட மறக்க முடியாத பாத்திரம். மீனாவைப் பொறுத்த வரையில்(திணை வேறுபா டின்றி) தோழியாக பஞ்சவர்ணம் உள்ளது. எடுத்துரைப்பு முறை, கனகச்சி தமாகப் பூடகமாக அமைந்தள்ள முடிவு என்பனவும் பாராட்டுக்குரியனவாகும். குழந்தையை இழந்த வண்டியோட்டி வண்டிப் பயணிகளிடம் அத்துயரைக் கூறமுடியாமல் இறுதியில் கொட்டிலில் குதிரையைக்கட்டும்போது குதிரையிடம் தன் துயரைப் பகிர்ந்து கொள்வதும் குதிரை தலையசைத்து அதனைக் கேட்பதுமான அன்ரன் செக்கோவின் சிறுகதையொன்று இவ்வேளை ஞாபகம் வருகின்றது. அந்தக் குதிரையைவிட இக்கிளி உன்னத சிருஸ்டியாகவும் கதைக் கருவிற்கு ஏற்புடையதாகவும் சிருஸ்டிக் கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். நீண்ட காலத்திற்குப் பின் காத்திரமான படைப்பொன்று வாசிக்கக் கிடைத்தமை மனநிறைவைத் தருகின்றது.

## விஷச் செடிகள் - குரு சதாசிவம்

மிக முக்கியமானதொரு சமூகப் பிரச்சினை. பலரும் கவனம் செலுத்தாத விடயம். சிறப்பான முறையில் நகர்ந்து செல்கின்றது. முடிவில் இடம்பெறும் சம்பவத்தை (காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வது) தவிர்த்திருக்கலாம். கதைக் கருவிற்கும் சம்பவத்திற்கும் சிதம்பரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையல்லவா?

## சண்டியர் வாழ்வு - கூசை எட்வேட்

யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் ஒருகாலத்தில் சண்டியர்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்கதாகக் காட்டப்பட்டது. அவர்களை நினைவு கூரும்போது இன் றைய சண்டியர்களின் சரிவு ஆச்சரியப்ப டும்படியாக இல்லை என்றே கூறவேண் டும். சிவபாலனுடன்சேர்ந்து வாசகராகிய நாமும் சேர்ந்து சிரிக்கக்கூடியதாக எழுதப்பட்டுள்ளமை சிறப்பே.

இம் மஞ்சரியின் மூன்று படைப்பு களும் கனதியானவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு. தயாளன்

## சிறுகதையில் உத்திகள்

சென்ற தடவை ஒரு கதையின் பாத்திரங்களை எவ்வாறு ஒருங்கமைப்பது எவ்வாறு அடையாளப் படுத்துவது பற்றிப் பார்த்தோம். இம்முறை கதைகள் எழுதும் உத்திகளை எவ்வாறு உபயோகிப்பது என்பதுபற்றிப் பார்ப்போம்.

உத்திகள் என்றால் உணர்ச்சிகளை கருத்தாக மாற்ற எழுதும் வடிவங்கள் என்று சுருக்கமாகச் சொல்லலாம். சில சந்தர்ப்பங்களை அல்லது சம்பவங்களை கதையாக்கும்போது புதுமையான எழுத்து வடிவத்தைப் பாவிக்கும்போது சம்பவம் சிறப்பான கதையாக உருவாகி விடுகிறது.

உத்திகளில் எதுகை மோனை வர சொற்றொடர்களை அமைப்பதும் நீட்டிக் கூறாமல் சுருங்கக் கூறுதலும் சிறந்த கதை மாந்தர்களை உருவாக்குவதும் நனவோடை முறையில் கதை சொல்லுதலும் சிறந்த உத்திகளாக உள்ளன.

உண்மையில் உத்தி என்பது கதை சொல்லும் முறையே. ஒரு படைப்பு வாசகர் மனதில் நிலைத்து நிற்பதற்கு நீங்கள் கையாளும் உத்தியும் பிரதான காரணமாகிறது. உத்திகள் பரந்துபட்ட சிந்தனைக்கும் வழிவகுக்கிறது.

இந்த வகையில் சிறுகதையின் மொழி நடையும் மிக அவசியமாகிறது. சிறு கதைகளில் மிகமிக எளிய நடையை பயன்படுத்த வேண்டும். அதாவது எந்தத் தரத்தில் உள்ளவரும் வாசித்துப் புரிந்து ணரும் வண்ணம் இருத்தல் வேண்டும். பண்டித நடைகள் சிறுகதைக்கு ஏற்ற னவல்ல. அனைத்து சமூகத்தினரும் படித்து விளங்கக்கூடியதாக பொதுவான ஒரு மொழி நடையைப் பாவித்தல் வேண்டும்.

ஒவ்வொரு படைப்பாளியும் தங்களுக் கென்று ஒரு மொழி நடையைப் பயன்ப டுத்துவார்கள். ஆனால் உத்திகளைப் பொறுத்தவரை அதற்கான உத்தியை கதையே தேர்வு செய்கிறது. எழுத்தாளன் அதனைச் செவ்வனே பயன் படுத்துகிறான். அதே நேரம் உத்திகளே சிறுகதை என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. எவ்வித உத்திகளும் பயன் படுத்தாமல் சாதாண எழுத்துவழக்கில் வெற்றியடைந்த கதைகள் பல உண்டு. அடுத்த தடவை உத்திகளின் பாவ னைபற்றிப் பார்ப்போம்

(இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI
EDUCATION CENTRE
# LEC

## ENROLLING NOW
2022 / 2023

REGISTER NOW

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285



## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org